தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெயில்: வேலூரில் 107 டிகிரி



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் 107 டிகிரி வெயில் ஞாயிற்றுக்கிழமை பதிவானது. இதேபோல் கோவை, தருமபுரி, கரூர் பரமத்திவேலூர், மதுரை, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

வேலூர் - 107, திருச்சி, சேலம் - 105, தருமபுரி, கரூர், பரமத்தி வேலூர் - 104, மதுரை, பாளையங்கோட்டை - 103, கோவை - 100, சென்னை - 98, கொடைக்கானல் - 73

## "நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை சராசரி அளவே இருக்கும்'

**சென்னை,**

நாட்டில் இந்தாண்டு தென்மேற்கு பருவமழை சராசரி அளவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இந்தியாவில் ஜூன் முதல்

செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவமழைக் காலமாகும். கடந்த 2013ஆம் ஆண்டில் தென்மேற்கு பருவமழையின் போது சராசரியை விட சற்று கூடுதலாக மழை பெய்தது. தென்மேற்கு பருவமழை காலத்தில் சராசரி மழை அளவு 89 செ.மீ. ஆகும். ஆனால், கடந்த ஆண்டு சற்று கூடுதலாக 93 செ.மீ. மழை பெய்தது. இது 106 சதவீதம் ஆகும். அதேவேளையில் கடந்த ஆண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்தது.

இந்தாண்டு சராசரி அளவு: இந்த நிலையில் இந்தாண்டு தென்மேற்கு பருவமழை அளவு சராசரியாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

வட அட்லாண்டிக் மற்றும் வட பசிபிக் பெருங்கடல் பரப்புகளின் வெப்பம், தெற்கு இந்திய பெருங்கடல் பரப்பு வெப்பம், கிழக்கு ஆசிய கடல்களின் சராசரி அழுத்தம், வடமேற்கு ஐரோப்பிய நிலப்பரப்பு காற்றின் வெப்பம், பசிபிக் கடலின் வெப்ப நீர் அளவு ஆகியவற்றைக் கொண்டு இந்தியாவில் தென்மேற்கு பருவமழை கணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணிப்புகளின்படி, பெரும்பாலும் சராசரியாகவே பருவமழை இருக்கும். இவ்வாறு சராசரி மழை பெய்ய 35 சதவீதம் வாய்ப்புள்ளது. பற்றாக்குறையாக பெய்ய 23 சதவீதமும், கூடுதலாக பெய்ய 1 சதவீத வாய்ப்பும் உள்ளது என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் இருமுறை தென்மேற்கு பருவமழைக்கான முன்னறிவிப்பு வெளியிடப்படும். இந்த முன்னறிவிப்பு மீண்டும் ஜூன் மாதமும் வெளியிடப்படும்.

1951-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரையான காலத்தில் தென்மேற்கு பருவமழை சராசரி அளவு (நீண்ட நாள்) 89 செ.மீ. என கணக்கிடப்பட்டுள்ளது.

## பூக்கள் விலை சரிவு: பொதுமக்கள் மகிழ்ச்சி

**சென்னை,**

திருமண நிகழ்ச்சி உள்ளிட்ட சுப மூகூர்த்த தினங்கள் குறைந்ததால் சென்னையில் பூக்கள் விலை குறைந்துள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழகம் மற்றும் ஆந்திரம், கேரளம், கர்நாடகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து

பூக்கள் தினமும் லாரிகள் மூலம் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. தமிழ்ப் புத்தாண்டையொட்டி கடந்த சில வாரங்களுக்கு முன்பு மல்லிகை, முல்லை, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்கள் கிலோ ரூ.400-க்கு மேல் விற்பனையானது. அதைத் தொடர்ந்து வந்த நாள்களில் திருமண நிகழ்ச்சி உள்ளிட்ட முகூர்த்த தினங்கள் மிகக் குறைவாகவே இருந்ததால் அடுத்தடுத்த நாள்களில் பூக்கள் விலை சரிந்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அடுத்த வாரம் முதல் முகூர்த்த தினங்கள் தொடர்ந்து வரவிருப்பதால் பூக்களின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கோயம்பேடு பூ மார்க்கெட் சங்கத் தலைவர் அருள் விசுவாசம் தெரிவித்தார். சென்னை கோயம்பேடு பூ மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பூக்கள் விலை விவரம் கிலோவில் (பழைய விலை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது):

மல்லிகை ரூ.75 (ரூ.150)

முல்லை ரூ.100 (ரூ.150)

கனகாம்பரம் ரூ.300 (ரூ.400)

சாமந்தி ரூ.80 (120)

அரளி ரூ.60 (ரூ.80)

ரோஜா ரூ.40 (ரூ.55)

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பயிற்சி**

**சிவகங்கை,**

வறட்சியால் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வருமானத்தை அதிகரிக்கும் வகையில் கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட உள்ளது.

சிவகங்கையை அடுத்த பிரவலூரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் உழவர் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு பயிற்சிகள் அவ்வப்போது வழங்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் விவசாயம் மேற்கொள்ள முடியவில்லை.

எனவே விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி வரும் ஏப்.29ஆம் தேதி வழங்கப்பட உள்ளது. இந்த முகாமில் 30 விவசாயிகள் மட்டும் கலந்து கொள்ளலாம். இதற்கு கட்டணம் ஏதும் இல்லை. விருப்பமுள்ள விவசாயிகள் இந்த பயிற்சி வகுப்பினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வங்கியின் உழவர் பயிற்சி மைய இயக்குநர் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நத்தம் பகுதியில் மாம்பழ சீசன் மந்தம்: விளைச்சல் குறைவால் விவசாயிகள் கவலை**

**நத்தம்,**

நத்தம் பகுதியில் மாம்பழ விளைச்சல் குறைவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நத்தம் பகுதியில் கடும் வறட்சி நீடித்து வருவதாலும், பருவ மழை உரிய காலங்களில் பெய்யாததாலும், மாமரங்கள் போதுமான ஈரப்பதம் இன்றி வாடி வதங்கி காணப்படுகின்றன. இந்நிலையில் பிப்ரவரி மாதம் மாமரங்கள் பூ பூக்கத் தொடங்கி, மார்ச் மாதம் பிஞ்சுகள் பிடித்தது. ஆங்காங்கே ஆழ்குழாய் கிணறு அமைத்து, அதன் வாயிலாக கிடைக்கக்கூடிய தண்ணீரைப்பயன்படுத்தி, மரங்களை பிழைக்க வைத்தனர். ஏப்ரல் முதல் வாரத்தில் மாம்பழங்கள் அறுவடை தொடங்கியது. தற்போது கோபால்பட்டி, செந்துறை, குட்டுபட்டி, வத்திபட்டி, பரளி உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியின் காரணமாக இந்த ஆண்டு எதிர்பார்த்த விளைச்சல் இல்லை.

இதுபற்றி வத்திபட்டியைச் சேர்ந்த விவசாயி கௌதமன் கூறியது:

இந்த ஆண்டு அறுவடை முடிந்து விற்பனைக்கு வந்துள்ள மாம்பழங்களான பாலாமணி ரகம் கிலோ ரூ.20, கல்லாமை ரூ.18, தங்ககாச்சி ரூ.16, தேங்காய் பஸ்பம் ரூ.8 என மொத்த விலையில் விற்பனையாகிறது. சில்லரைக் கடைகளில் இரட்டிப்பாக விலைபோகிறது. தவிர கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த ஆண்டு விளைச்சலும் குறைந்துபோய்விட்டது. இதனால் மா விவசாயிகளுக்கு ரூ. பல லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கவலையுடன் கூறினார்.

மாம்பழ சீசன் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் வாரத்தில் முடிவுக்கு வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு ஜூன் மாதத்திலேயே சீசன் முடிவுக்கு வந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு சீசனில் கேரளா உள்பட வெளிமாநிலங்களில் இருந்தும் மாம்பழ வியாபாரிகள் வரத்துக் குறைந்துபோனது. நத்தம் மா கமிஷன் கடைகளில் எதிர்பார்த்த அளவு மாம்பழம் வரத்து இல்லாமல் வியாபாரிகளும் கவலையோடு உள்ளனர்.

## பெரியகுளம் பகுதியில் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க கோரிக்கை

**பெரியகுளம்,**

பெரியகுளம் பகுதி மா விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையை இப் பகுதியில் அமைக்க அரசு நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும் என மா விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பெரியகுளம் பகுதியில் மா விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இப் பகுதியில் கும்பக்கரை, முருகமலை, ஈச்சமலை, சோத்துப்பாறை, கோயில்காடு, மணல்காடு, புலிக்கூடு, செழும்பு, சுக்காம்பாறை, சின்னாம்பாளையம் மற்றும் மஞ்சளாறு உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மா விவசாயம் நடைபெறுகின்றது.

இப்பகுதியில் நீலம், கிரேப், செந்தூரம், மனோரஞ்சிதம், காலேபாடி, மல்கோவா, அல்போன்சா, பங்கனபள்ளி மற்றும் கல்லாமை உள்பட பல்வேறு வகையான மாம்பழ ரகங்கள் விளைகின்றன. இப் பழங்கள் ஏப்ரல் மாதம் முதல் ஜூலை வரையிலான சீசன் காலத்தில் கர்நாடகம், கேரளம், ஆந்திரா, குஜராத் மற்றும் புதுச்சேரி உள்பட பல்வேறு மாநிலங்களுக்கு, இப் பகுதியிலிருந்து தினசரி ஏராளமான லாரிகள் மூலம் அனுப்பி வைககப்படுகின்றது. மேலும் விளைச்சல் அதிகமான காலங்களில் மாம்பழங்களை பறித்து, அனுப்ப முடியாமல் தேக்கநிலை ஏற்படுகின்றது. இதனால் சேதம் ஏற்பட்டு, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்றது.

இந்நஷ்டத்தை தவிர்ப்பதற்காக இப் பகுதியில் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கவேண்டும் என மா விவசாயிகள் சங்க கூட்டமைப்பு மூலம்

அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. மேலும் இத் தொழிற்சாலை அமைக்கப்படுவதன் மூலம் மாம்பழங்களை பதப்படுத்தி, மாம்பழ கூழ் தயாரித்து, அதன் மூலம் ஜூஸ், ஜாம் போன்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து, ஆண்டு முழுவதும் விற்பனை செய்யலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு வருமானம் கிடைப்பதோடு, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

எனவே இப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி, நீண்ட கால கோரிக்கையான மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையை பெரியகுளம் பகுதியில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**கம்பு, உளுந்து விலை உயர வாய்ப்பு இல்லை**

**தேனி,**

கம்பு, உளுந்து ஆகியவற்றின் விலை நடப்பு பருவத்தில் உயர்வதற்கு வாய்பு இல்லை என்று தேனி வேளாண்மை வணிக துணை இயக்குநர் செல்வராஜ் கூறினார்.

இதுகுறித்து அவர் கூறியது: மாவட்டத்தில் மே, ஜூன், அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் கம்பு, உளுந்து பாசிப்பயறு ஆகியவை பயிரிடப்படுகிறது. கோவையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக தகவல் மையம், விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 15 ஆண்டுகள் நிலவிய விலை நிலவரத்தை ஆராயந்து கம்பு, உளுந்து ஆகியவற்றுக்கான விலை முன்னறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

இதன்படி, கம்பு பண்ணை விலை நடப்பு மாதம் கிலோ ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.15 வரை இருக்கும். உளுந்து கிலோ ஒன்றுக்கு ரூ.52 முதல் ரூ.53 வரையும், பாசிப்பயறு கிலோ ரூ.62 முதல் ரூ.64 வரையும் இருக்கும். வரும் மே மாதத்துக்குப் பிறகு கம்பு, உளுந்து, பாசிப்பயறு ஆகியவற்றின் பண்ணை விலை உயர வாய்ப்பில்லை.

இதனால், விவசாயிகள் அறுவடை செய்த கம்பு, உளுந்து மற்றும் பாசிப்பயறை சேமிப்பில் வைக்காமல் விற்பனை செய்யலாம் என்றார்.

**கோடையில் கால்நடைகளை பராமரிக்கும் முறை**

**தேனி,**

கோடை காலத்தில் வெப்பத்தின் தாக்கத்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் கால்நடைகளை பராமரிப்புது குறித்து கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது: கோடையில் ஈக்களின் தொல்லையால் கறவை மாடுகள் அமைதியின்றி காணப்படும். இதனால் பால் உற்பத்தி பாதிக்கப்படும். இதை தடுக்க தொழுவத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சாணம், சிறுநீர் கழிவுகளை அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும். உடல் வெப்பத்தை தணிக்க 2 அல்லது 3 முறை கறவை மாடுகள் மீது தண்ணீர் தெளிக்க வேண்டும்.

காலை மற்றும் மாலை நேரத்தில் மட்டும் மேய்சலுக்கு அனுப்ப வேண்டும். வெயில் அதிகமாக இருக்கும் போது மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது.

இறைச்சிக் கோழிகளின் இறப்பு விகிதம் கோடை காலத்தில் அதிக அளவில் இருக்கும். கோடை காலத்தில் இறைச்சிக் கோழிகளுக்கு 1.5 சதுர அடியும், முட்டைக் கோழிகளுக்கு 2.5 சதுர அடியும் இடவசதி தேவை. வெப்பத்தால் ஏற்படும் தளர்ச்சியை போக்குவதற்கு வைட்டமின் சி அளிக்கலாம் கோடையில் ஆடுகளுக்கு குடல்புழு நீக்க சிகிச்சை அளிக்கலாம் என்றனர்.

**வித்யாலய வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு பணி நியமன ஆணை**

**பெ.நா.பாளையம்,**

பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வேளாண்மை ஊரக மேம்பாட்டுக் கல்லூரியில் பயின்றவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா நடந்தது.

கல்லூரி செயலாளர் சுவாமி தத்பிரபானந்தர் வரவேற்றார். முதல்வர் சங்கரலிங்கம் ஆண்டறிக்கை வாசித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கூடுதல் முதன்மை வனப் பாதுகாவலரும், தமிழ்நாடு வனப் பயிற்சி கழகத்தின் முதல்வருமான அருணா பாசு சர்க்கார் பேசியது:

இந்தியாவின் வளர்ச்சிக்கு விவசாயம் தான் உறுதுணையாக உள்ளது. கிராமங்கள் நிறைந்த இந்தியாவில் நவீன முறைகளுடன் இன்னும் பாரம்பரியமான விவசாய முறைகளும் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்தியாவசியத் துறையான வேளாண்மை இல்லையெனில் அனைத்து துறைகளும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த இப்படிப்பை இங்கு முடித்த அனைவருக்கும் வேலை கிடைத்துள்ளது பாராட்டத்தக்கது.

பணியில் சேர்ந்தவுடன் அறிவையும், ஆற்றலையும் தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டும். உணவு உற்பத்தியில் நாம் இன்னும் முன்னேற நம்மால் இயன்றளவிற்கு நாட்டிற்கு பணியாற்ற வேண்டும் என்றார்.

வித்யாலய கல்வி நிறுவனங்களின் செயலர் சுவாமி அபிராமானந்தர், மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.விளையாட்டு, செய்முறை பயிற்சிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகளையும், சான்றிகழ்களையும் அருணா பாசு சர்க்கார் வழங்கினார். பண்ணை கண்காணிப்பாளர் பி. முருகேசன் நன்றி கூறினார்.

## அமோக விளைச்சல்: மல்லிகை விலை கிலோ ரூ.200 ஆக சரிவு

**சத்தியமங்கலம்,**

கோடை வெயில் காரணமாக, மல்லிகை மகசூல் 20 டன்னாக அதிகரித்துள்ளதால், அதன் விலை கிலோ ரூ.200 ஆக சரிந்துவிட்டது.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள தாண்டாம்பாளையம், சிக்கரசம்பாளையம், கெஞ்சனூர், தொட்டம்பாளையம், வடவள்ளி, கொத்தமங்கலம், பட்டரமங்கலம், குய்யனூர், கணுவக்கரை, காரணூர், இரும்பொறை, செங்கம்பள்ளி உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மல்லி, முல்லை, கனகாம்பரம், சம்பங்கி, செவ்ந்தி, பட்டுப்பூ, செண்டுமல்லி, ஜாதிமுல்லை உள்பட பல்வேறு வகையான பூக்கள் சுமார் 85 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு மாதமும் சுமார் 20 லட்சம் மல்லி, முல்லைப்பூ நாற்றுகள் நடவு செய்யப்படுகின்றன. நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பூக்களின் உற்பத்தி ஒரு டன்னாகவும் பிற மாதங்களில் அதிகபட்சமாக 20 டன்னாகவும் இருக்கும்.

தற்போது, கோடை வெயிலில் பூக்கள் உற்பத்தி நாள்தோறும் 20 டன்னை தாண்டுவதால் மல்லிகை விலை ரூ.200 ஆக சரிந்துவிட்டது. சத்தியில் செயல்படும் தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் சனிக்கிழமை நிர்ணயிக்கப்பட்ட பூக்கள் விலை விபரம்: மல்லி கிலோ ரூ.200, முல்லை கிலோ ரூ.350 மற்றும் கனகாம்பரம் ரூ.500.

பிப்ரவரி மாதத்தில் மல்லிகை உற்பத்தி ஒரு டன்னாக இருந்ததால், கிலோ ரூ.1000-க்கு விற்கப்பட்டது. தற்போது, அதன் உற்பத்தி 20 டன்னாக அதிகரித்துள்ளதால், மல்லி கிலோ ரூ.200 ஆக சரிந்துவிட்டது. கேரளாவில் திருவிழா நடைபெறுவதால், கனகாம்பரத்தின் விலை மட்டும் அதிகரித்துள்ளது.

சத்தியில் கொள்முதல் செய்யப்பட்ட பூக்கள் மைசூர், பெங்களூரு, பாலக்காடு, கோவை போன்ற நகரங்களுக்கு வேன், கார், பிக்-அப் வேன் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. திருவனந்தபுரம், கொச்சி, ஹைதராபாத், மும்பை, சார்ஜா போன்ற அரபு நாடுகளுக்கு விமானம் மூலம் பூக்கள் அனுப்பப்படுகின்றன.

**வரத்து குறைவு: மீன்கள் விலை உயர்வு**

**ஈரோடு,**

வரத்து குறைவு காரணமாக மீன்கள் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

கடல் மீன்களின் இனப்பெருக்கக் காலமாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்.15-ம் தேதி முதல் ஜூன் வரை கடலில் விசைப்படகுகள் மூலம் சென்று மீன் பிடிக்கத் தடை விதிக்கப்படும். இதைத் தொடர்ந்து, மீனவர்கள் விசைப்படகு மூலம் மீன் பிடிக்க செல்வதில்லை. நாட்டுப் படகுகள் மூலமே மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடித்து வருகின்றனர். இதனால் குறைந்த அளவே மீன்கள் பிடிக்கப்பட்டு, கடலோர பகுதிகளில் இருந்து தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகிறது.

இதன் காரணமாக, ஈரோடு மாவட்டத்தில் உள்ள மீன் சந்தைகளுக்கு முன்பை விட மிகக் குறைந்த அளவே மீன்கள் வருகின்றன. மீன்களின் வரத்து குறைந்ததால், அனைத்து வகையான மீன்களின் விலையும் பல மடங்கு அதிகரித்து உள்ளது.

ஒரு கிலோ ரூ.410க்கு விற்ற சீலா மீன் ரூ.480 வரையும், ரூ.150-க்கு விற்ற முரல் மீன் ரூ.260 வரையும், ரூ.120-க்கு விற்ற வாளை ரூ.200 வரையும், ரூ.150க்கு விற்ற

சங்கரா ரூ.250 வரையும், ரூ.80-க்கு விற்ற மத்தி ரூ.120 வரையும் ரூ.250-க்கு விற்ற நண்டு ரூ.350 வரையும் விற்கப்படுகிறது. இதுபோல மற்ற மீன்களின் விலையும் அதிகரித்து உள்ளது. இந்த விலை உயர்வால், மீன் பிரியர்கள் கடல் மீன்கள் வாங்குவதைத் தவிர்த்து வருகின்றனர்.

கடல் மீன்களுக்கு பதில் அணை மீன்களான கட்லா, ரோகு, மிர்லா போன்ற மீன் வகைகளை அதிகம் வாங்கி சாப்பிடுகின்றனர். மேலும், சிலர் இப்போது பிராய்லர் கோழிக்கறி விலை குறைவாக உள்ளதால், அதை வாங்கி சமைத்து சாப்பிடுகின்றனர்.

**காவிரி நீர்த்தேக்கப் பகுதியில் அறுவடை தொடக்கம்**

**மேட்டூர்,**

மேட்டூர் அணையின் நீர்த்தேக்கப்பகுதியில் உள்ள நிலங்களில் அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளது.

மேட்டூர் அணை கட்டப்பட்டபோது, நீர்த்தேக்கப் பகுதியில் குடியிருந்த போது, மக்கள் வேறு இடங்கில் குடியமர்த்தப்பட்டனர். இந்த நிலையில், மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறையும் போது, தண்ணீர் வற்றியப் பகுதிகளில் கிராம மக்கள் உழுது பயிரிடுவார்கள். தற்போது, அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் கம்பு, ராகி, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். இப்போது, அந்தப் பயிர்கள் விளைச்சல் கண்டுள்ளதை அடுத்து, அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளன. பருவமழை பெய்து அணை மீண்டும் நிரம்பும் வரை விவசாயப் பணிகள் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் குறையும் போது, இருபோக சாகுபடி செய்தாலே ஓராண்டுக்கு போதுமான மகசூளை எடுத்து விடமுடியும் என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர். தற்போது, அணையின் நீர்மட்டம் குறைந்ததால் பண்ணவாடி பரிசல் துறை பகுதியில் ஜலகண்டேஸ்வரர் ஆலயம் முழுமையாக வெளியே தெரிகிறது. அவற்றை அருகில் சென்று பார்ப்பதற்காக ஏராளமான பொதுமக்கள் வருகின்றனர். அவர்களை பரிசலில் ஏற்றிச் செல்ல மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தை அருகில் சென்று காணமுடியாத நிலை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

**திருச்செங்கோடு வேளாண் சங்கத்தில் மஞ்சள் ரூ.80 லட்சத்துக்கு விற்பனை**

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் மஞ்சள் ரூ.80 லட்சத்துக்கு விற்பனையாகியது.

ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சனிக்கிழமை சுமார் 2000 மூட்டை மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர். இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 30-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ.80 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது.

விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7000 முதல் ரூ.8900 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.6000 முதல் ரூ.7500 வரை விலை போனது. பனங்காளி ரகத்துக்கு ரூ. 9000 முதல் ரூ.14000 வரை விலை கிடைத்தது. பனங்காளி ரகத்துக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்ததாக சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

**நவ. 6-ல் கோவையில் தோட்டக் கலை மாநாடு: விவசாயிகளுக்கு அழைப்பு**

**நாகப்பட்டினம்,**

கோவையில் நடைபெறவுள்ள இந்திய தோட்டக்கலை மாநாட்டில், புதுமை புகுத்திய தோட்டக்கலை விவசாயிகள் பங்கேற்கலாம் என சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கு. சசிகலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வரும் நவம்பர் 6 முதல் 9-ம் தேதி வரை 6-வது இந்திய தோட்டக்கலை மாநாடு - 2014 கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்த மாநாட்டுக்கு "தோட்டக்கலையால் ஏற்படும் ஒருங்கிணைந்த வளர்ச்சி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் தோட்டக் கலை விவசாயத்தில் புதுமை புகுத்திய 2 விவசாயிகள்

இந்த மாநாட்டுக்குத் தேர்வு செய்யப்படவுள்ளனர். எனவே, நாகை மாவட்ட தோட்டக்கலை விவசாயிகள் தங்களது கண்டுபிடிப்புகளுடன் திங்கள்கிழமை மாலைக்குள் (ஏப். 28) சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

**ஆறுதல் அளிக்காத கோலா மீன் அறுவடை**

**நாகப்பட்டினம்,**

மீன்பிடித் தடைக்காலம் அமலில் உள்ளதால் மீன்வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கோலா மீன் அறுவடை தொடங்காதது மீனவர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீன்பிடித் தடைக்காலம் கடந்த 15-ம் தேதி முதல் மே 29-ம் தேதி இரவு வரை அமலாக்கப்பட்டுள்ளது. இதனால், விசைப் படகு மூலமான மீன்பிடிப்பு முற்றிலுமாக முடங்கியுள்ளது.

இதனால், விசைப் படகு மீன்பிடிப்பு மூலம் நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறும் தொழிலாளர்கள் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வேலையிழப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதேபோல, ஐஸ் கட்டி உற்பத்தியும் குறிப்பிடத்தக்க பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.

விசைப் படகு மூலமான ஆழ்கடல் மீன்பிடிப்பு இல்லாமல், பைபர் படகு மற்றும் கட்டுமரம் மூலம் நடைபெறும் மீன்பிடிப்பில் குறைந்தளவிலான மீன்கள் மட்டுமே அறுவடை செய்யப்படுகிறது. இந்த மீன்கள் உள்ளூர் தேவையை மட்டுமே பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளன. இதனால், மீன் ஏற்றுமதியும் முடங்கியுள்ளது.

விசைப் படகு மீன்பிடித் தொழில் தடைபட்டுள்ளதால், உயர்ரக மற்றும் சுவை மிகுந்த சில மீன் வகைகள் கிடைக்காத நிலையில், மீன் பிரியர்களின் தேவைகளுக்கும், மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும் ஆறுதல் அளிக்கக் கூடியது கோலா மீன்கள் அறுவடை. கடந்த ஆண்டில் ஏப்ரல் மாத 3-வது வாரத்தில் கோலா மீன் அறுவடை விறுவிறுப்படையத் தொடங்கியது. இதனால், மீன்பிடித் தடைக் காலத்தின் பாதிப்பிலிருந்து மீனவர்கள் ஆறுதல் அடைய வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால், நிகழாண்டில் ஏப்ரல் மாத இறுதி நாள்கள் நெருங்கும் நிலையிலும், கோலா மீன் அறுவடை விறு விறுப்படையவில்லை. கடந்த ஓரிரு நாள்களாக மிக, மிக குறைந்த எண்ணிக்கையில் வெளிப் பகுதிகளில் கோலா மீன் அறுவடை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், நாகை மாவட்டத்தில் கோலா மீன் அறுவடை இதுவரை தொடங்காதது மீனவர்களுக்கும், மீன் பிரியர்களுக்கும் ஏமாற்றம் அளித்து வருகிறது.

இந்த ஏமாற்றத்துக்குத் தீர்வு கிடைக்கும் வகையில், மே மாத முதல் வாரத்திலிருந்து கோலா மீன்கள் அறுவடை விறு விறுப்படையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**காரைக்காலில் மீன் விலை உயர்வு**

**காரைக்கால்,**

ஆழ்கடல் விசைப்படகு மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளதால், காரைக்காலில் மீன்களின் விலை கணிசமாக உயர்ந்திருக்கிறது.

மீன்களின் இனப்பெருக்க காலமாக கருதி 45 நாள்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை ஏப். 15 முதல் தொடங்கியுள்ளது.

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 10 மீனவ கிராமங்களில் இருந்து சிறிய வகை பைபர் மோட்டார் படகு மூலம், குறைந்த தொலைவு கடலுக்குச் சென்று மீன்பிடிக்க தடையில்லை என்பதால், இப்படகுகளில் மட்டுமே மீன்கள் பிடித்து வரப்படுகின்றன.

விசைப்படகு மூலம் பிடித்துவரப்படும் பெரிய வகையைச் சேர்ந்த திருக்கை, காக்க மீன், வஞ்ஜிரம், கொடுவா போன்ற மீன்கள் வரத்து முற்றிலும் இல்லை. வலை மீன் என்னும் சங்கரா, காலா, பன்னா, கெளுத்தி, பாரை போன்ற மீன் வகைகளும், சிறிய அளவுடைய இறால், நண்டு மட்டுமே தற்போது கிடைக்கிறது. சிறிய வகை கடல் கொடுவா, கெண்டை கிடைக்கிறது. காரைக்கால் சந்தைக்கு முன்புபோல வரத்து இல்லாததால் மீன்களின் விலை கணிசமாக உயர்ந்திருக்கிறது.

இதுகுறித்து இந்தப் பகுதி மக்கள் கூறியது:

மீன்கள் ஐஸ்-ல் வைக்காமல் சுத்தமாகக் கிடைக்கிறது. ஆனால், முன்பைவிட 30 - 40% வரை விலை அதிகமாக விற்கிறார்கள். காரைக்காலில் கடந்த 10 நாள்களுக்கு முன்பு ஆழ்கடலில் பிடித்து ஐஸ்-ல் வைத்திருக்கும் வஞ்ஜிரம் கிலோ ரூ. 700 வரை விற்கிறார்கள். முன்பு இந்த மீன் ரூ. 300-க்கு விற்பனையானது. 10 நாள்களைக் கடந்து ஐஸ்-ல் வைத்த மீன்களை சமைக்கும்போது உதிர்ந்து வீணாகிவிடும். இது உடலுக்கு கேடானதுமாகும். இதை கண்டறிந்து மீன்வளத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இதுகுறித்து மீனவர்கள் கூறும்போது, கடலில் குறைந்த தொலைவில் பைபர் படகுகளில் அதிகாலை 3 மணிக்கு புறப்பட்டு 7, 8 மணிக்கு திரும்பிவிடுவோம். இவ்வகை குறுகிய தொலைவில் சிறிய வகை மீன்கள்தான் கிடைக்கும். சந்தையில் பெரிய மீன்கள் வரத்தின்மையால், சிறிய வகை மீன்களின் விலை உயர்ந்திருக்கிறது என்றனர்.

**களியக்காவிளையில் பரவலாக மழை**

**களியக்காவிளை,**

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது.

இப்பகுதியில் கடந்த இரு நாள்களாக மாலையில் லேசான மழை பெய்து வந்தது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. மாலையில் வானில் திடீரென மழை மேகம் சூழ்ந்தது.

தொடர்ந்து மாலை 4.45 மணி முதல் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. களியக்காவிளை, படந்தாலுமூடு, பாறசாலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை பெய்தது. அரை மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்ததால், இப்பகுதியில் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

கருங்கல்: கருங்கல்,மார்த்தாண்டம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக லேசான மழை பெய்தது.

இப்பகுதியில் சில நாள்களாக அதிக வெப்பம் நிலவியது. மிதமான மழையும் பெய்து வந்தது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை கருங்கல், வெள்ளியாவிளை, நடுத்தேரி, பாலூர், மாங்கரை, நட்டாலம், செல்லங்கோணம், கப்பியறை, பள்ளியாடி, புதுக்கடை, பைங்குளம், மார்த்தாண்டம், விரிகோடு,

உண்ணாமலைக்கடை, குழித்துறை, மேல்புறம் உள்ளிட்ட இடங்களில் பரவலாக லேசான மழை பெய்தது.

**திருவட்டாறில் 77 மி.மீ. மழை பதிவு**

**நாகர்கோவில்,**

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறில் அதிகபட்சமாக 77 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

குமரி மாவட்டத்தில் பொதுமக்களை கோடை வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் கடந்த இரு நாள்களாக சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்து வருகிறது.

சனிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் திருவட்டாறில் 77 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. ஆனால் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் எதிர்பார்த்த மழை இல்லை. பேச்சிப்பாறை அணையில் 1.4 மி.மீ. மழையும், பெருஞ்சாணியில் 3.8 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 15 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 211 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 37.10 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 35 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. காலையில் வெயிலும், பிற்பகலில் லேசான மழையும் ஆங்காங்கே பெய்துள்ளது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது.

**பலாப் பழம் சீசன் தொடக்கம்**

**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில் பலாப்பழம் சீசன் துவங்கியுள்ளது.

பண்ருட்டி பகுதியில் விளைகின்ற சுவை மிகுந்த பலாப் பழங்கள் பிரசித்திப் பெற்றதாகும். இப் பழங்களை மக்கள் விரும்பி வாங்கிச் செல்வது வழக்கம். பண்ருட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் பலாப்பழம் சீசன் துவங்கியுள்ளது.

நன்கு பழுத்த பலாப் பழங்கள், கும்பகோணம்- விக்ரவாண்டி சாலையில் காடாம்புலியூர் பகுதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சாலையோரங்களில், பலாப் பழங்களை மலைபோல குவித்து வைத்துள்ளனர். இங்கு விற்பனையும் சூடு பிடித்துள்ளது. ஐந்து கிலோ எடை கொண்ட நடுத்தர ரக பலாப் பழம், ரூ,.200-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

எடைக்குத் தகுந்தாற்போல் ரூ.600 வரை விற்கப்படுகிறது.

**நிழல்வலை நாற்றங்கால் பாசனம் : சர்க்கரை துறை இணை இயக்குநர் ஆய்வு உளுந்தூர்பேட்டை,**

அரசூர் கரும்பு கோட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நிழல்வலை நாற்றங்கால் சொட்டுநீர் பாசன கரும்பு வயல்களை சர்க்கரைத் துறை இணை இயக்குநர் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதிக்குள்பட்ட அரசூர், திருவெண்ணெய்நல்லூர், பிள்ளையார்குப்பம் கோட்டத்துக்குள்பட்ட பகுதிகளில் நிழல்வலை நாற்றங்கால் மற்றும் சொட்டுநீர் பாசன வயல்களை சர்க்கரைத் துறை இணை இயக்குநர் பன்னீர்செல்வம், செங்கல்வராயன் ஆலை கரும்பு அபிவிருத்தி அலுவலர் பாண்டியன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அரசூர் கோட்டத்திற்குள்பட்ட பருகம்பட்டு கிராமத்தில் சதீஷ் என்பவரின் வயலில்

அமைக்கப்பட்டுள்ள கரும்பு நிழல்வலை நாற்றங்காலையும், கருவேப்பிலைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராஜாமணி, ஜோதி ஆகியோர் உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் பயிரிட்டுள்ள நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்துள்ள சொட்டுநீர் பாசன வயலையும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வின்போது அரசூர் கரும்பு கோட்ட அலுவலர் தங்கமணி, கரும்பு உதவியாளர்கள் கொளஞ்சிநாதன், கனிமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

**நெல்லை மாவட்ட கடற்கரையில் மீன்பிடித் துறைமுகம் நிறைவேறுமா, மீனவ மக்களின் நீண்டகால கனவுத் திட்டம்?**

**வள்ளியூர்,**

திருநெல்வேலி மாவட்ட கடற்கரையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்ற, தங்களது நெடுநாள் கனவுத் திட்டம் நிறைவேறும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் இம் மாவட்ட மீனவ மக்கள்.

இம் மாவட்டத்தின் தென்கிழக்கு எல்லையாக 40 கிமீ தொலைவு கொண்ட கடற்கரை உள்ளது. தூத்துக்குடி மாவட்ட எல்லையான பெரியதாழையின் மேற்குப் பகுதியில் தொடங்கி ஜார்ஜ் நகர், மிக்கேல்நகர், கூடுதாழை, கூட்டப்பனை, உவரி, தோமையார்புரம், கூத்தங்குழி, விஜயாபதி, இடிந்தகரை, பஞ்சல், பெருமணல் கூட்டப்புளி ஆகிய கடற்கரைக் கிராமங்கள் அமைந்துள்ளன.

இக்கிராமங்களில் 95 சதவீதம் பேர் கடலில் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர். இத் தொழிலில் 25 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். இவர்களை நம்பி மீன் வியாபாரிகள், மீன்பிடிக் கருவிகள் விற்போர், மீன்பிடிப் படகு பழுது நீக்குவோர் என, 2,000-க்கும் மேற்பட்டோர் தொழில் செய்து வருகின்றனர்.

தலைமுறை தலைமுறையாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள இவர்கள், தொழிலை விரிவுபடுத்தவும், பாதுகாப்பாக செய்யவும் புதிய தொழில்நுட்பங்கள் கிடைத்திருக்கிறதா என்றால், இல்லை என்பதே பதிலாக உள்ளது.

இதர துறைகளில் வரும் புதிய தொழில்நுட்பங்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள, திருநெல்வேலி மாவட்ட மீனவர்களுக்குக் கிடைப்பதில்லை. மீன்பிடிப் படகுகளை கடலுக்குள் கொண்டுசெல்வதும், மீன்பிடித்துத் திரும்பும்போது படகுகளைக் கரையேற்றுவதும் மிகப்பெரிய போராட்டமாக உள்ளது.

இப் பகுதி கடற்கரையில் "கடலடி' எனப்படும் கடல் அலை அகோரமாக இருப்பதால் படகுகளை கடலில் விட்டுவைக்க முடிவதில்லை.

இப்பகுதி மக்களுக்கு மற்றுமோர் அச்சுறுத்தல், கடல் அரிப்பு. அதிகரிக்கும் கடலரிப்பால் இக் கிராமங்களின் நிலப்பரப்பு, நாளுக்குநாள் குறைந்துவருகிறது. கடலரிப்பைத் தடுக்க இதுவரை சரியான செயல்திட்டம் நிறைவேற்றப்படவில்லை என இப் பகுதி மீனவர்கள் அதிருப்தியும் வேதனையும் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய திருநெல்வேலி மாவட்ட கடற்கரைக் கிராமங்களில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவேண்டும் என்பதுதான் இப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை.

துறைமுகம் அமைந்தால், மீன்களைப் பதப்படுத்தவும், பாதுகாக்கவும் நவீன குளிரூட்டப்பட்ட நிலையங்களும் வந்துவிடும்; மேலும் சாலை, போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, தொழில் வளர்ச்சியடைவதுடன் வாழ்வாதாரமும் உயர்ந்துவிடும் என்பதுதான் இம் மக்களின் கனவாக உள்ளது.

இதுதவிர, கடலுக்குச் சென்று காணாமல்போகும் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க ஹெலிகாப்டர் வசதியோ, நவீன ரோந்து படகுகளோ மீன்வளத் துறை வசம் இல்லை எனக் கூறப்படுகிறது.

கடல் சீற்றம், கடலின் தன்மை குறித்து மீனவர்களுக்குத் தெரியப்படுத்த தொழில்நுட்ப வசதிகளும் இப் பகுதியில் இல்லை.

இது தொடர்பாக உவரி ஊராட்சி முன்னாள் தலைவர் அந்தோனி கூறியதாவது:

இம் மாவட்ட கடற்கரைக் கிராமங்களில் பிடிக்கப்படும் மீன்கள் கேரளம் உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும், கடலூர் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

வெளிநாட்டுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இறால், கணவாய் போன்ற உயர் ரக மீன்கள் இம் மாவட்ட கடற்கரையில்தான் அதிகம் கிடைக்கிறது.

இத்தகைய வளமிக்க மீன்பிடித் தொழில் செழிக்கவும், மீனவர் வாழ்க்கைத் தரம் உயரவும் இம் மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் மீனவ மக்களின் நெடுநாளைய கனவுத் திட்டம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அரபிக்கடல் மீன்கள் வரத்து அதிகரிப்பு : கட்டுப்படியான விலை; விற்பனை "ஜோர்'**



அரபிக்கடல் மீன்கள் வரத்து அதிகரிப்பால், விடுமுறை தினமான நேற்று, சென்னை சந்தைகளில் விற்பனை களைக்கட்டியது. கட்டுப்படியான விலை என்பதால், விற்பனையும் விறுவிறுப்பாக நடந்தது.

மீன்கள் உள்ளிட்ட கடல் உயிரினங்களின் இனவிருத்திற்காக, ஏப்., 15 முதல் மே 29ம் தேதி வரை, வங்கக்கடல் பகுதிகளான தமிழகம், புதுச்சேரி, ஆந்திராவில், மீன்பிடி தடை அமலில் உள்ளது.

இதன் காரணமாக, தமிழகத்தில் காசிமேடு துவங்கி கன்னியாகுமரி வரை, 8,500க்கும் மேற்பட்ட விசைப்படகுகள், துறைமுக வார்ப்பில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன. இந்நிலையில், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட அசைவ பிரியர்களின் தேவையை பூர்த்தி செய்ய, அரபிக்கடல் மீன்வரத்து அதிகரித்து உள்ளது. சென்னை, சிந்தாதிரிபேட்டை மற்றும் வானகரம் மீன் சந்தைகளில், அரபிக்கடல் மீன்கள், நேற்று விற்பனைக்கு குவிந்தன. மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் இருந்து, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வாகனங்கள் மூலம், இந்த மீன்கள் விற்பனைக்கு வந்தன. வானகரம் மீன்சந்தையில் பொதுமக்கள் மட்டுமின்றி, சிறு வியாபாரிகளும், போட்டிப்போட்டு மீன்களை வாங்கிச்சென்றனர். கட்டுப்படியான விலையில்

மீன்கள் கிடைத்ததால் பொதுமக்களும், அதிகளவு விற்பனை நடந்ததால், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து, வானகரம் மீன் சந்தை வியாபாரி, துரை கூறியதாவது: அரபிக்கடல் மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால், அவற்றின் விலையில் பெரிதாக மாற்றமில்லை. காசிமேடு மீன் சந்தையை விட, குறைவான விலையிலேயே மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ பெரிய வஞ்சிரம் 400 -- 600 ரூபாய், சிறிய வஞ்சிரம் 250, சுறா 200 -- 250, வவ்வால் 350 -- 450, சங்கரா 150 - - 220, கொடுவா 300 - -350, கானாங்கெளுத்தி 120, பாறை 250 - -300, சீலா 180 - 240, மத்தி 70, வாளை 150- - 200, பெரிய இறால் 350, சிறிய இறால் 250, நண்டு 150 - -250, கடமா 150, நெத்திலி 80 ரூபாய்க்கு விற்கப்பட்டன. ஆந்திர மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படும், ஏரி மீன்களான விரால் 350, கட்லா, ரோகு, கெண்டை 100 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. இவ்வாறு, அவர் கூறினார்.

### வேப்பம் பூ தேன் உற்பத்தி துவக்கம்

**தேனி**: கசப்பு தேன் உற்பத்தி, தேனியில் துவங்கி உள்ளது. ஏப்., - மே மாதங்களில், வேப்ப மரம் பூக்கும். ஜூன் வரை, இந்த பூக்களில் இருந்து எடுக்கப்படும் தேன், சிறிது கசப்பு சுவை உடையது; மருத்துவ குணம் கொண்டது.

இந்த தேனுக்கு, விலை அதிகம். மருத்துவ பயன்பாட்டிற்கு அதிகம் பயன்படுத்துவர்.

தேனியில், கசப்பு தேன் உற்பத்தி, இப்போது தீவிரமாக நடந்து வருகிறது. தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

ஒரு தேனீ, 2 கி.மீ., சுற்றளவிற்கு பறந்து சென்று, தேனை சேகரிக்கும் ஆற்றல் கொண்டது. தற்போது, வேப்பம் பூ சீசன் என்பதால், இப்போது சேகரிக்கும் தேனுக்கு மவுசு அதிகம்.

நாங்கள் தென்னை, மா, வாழை, திராட்சையில், அயல் மகரந்த சேர்க்கை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளோம்.

இதற்காக, தேனீக்கள் உற்பத்தியை அதிகரிக்கவும், அ தன் மூலம் தேன் உற்பத்தியை அதிகரிக்கவும் முடிவு செய்துள்ளோம்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

**திருச்சியை பதம் பார்த்த வெப்பம்: கோடை அனலில் மக்கள் தவிப்பு**

சென்னை: திருச்சியில் கடந்த இருதினங்களாக அதிகபட்சமாக, 42 டிகிரி செல்சியஸ் (107.6 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியுள்ளது. சென்னை, மதுரை, சேலம், வேலூரிலும் வெப்பநிலை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

காற்றில் ஈரப்பதம் : தமிழகத்தை பொறுத்தவரை, வெப்ப நிலை தாறுமாறாக உயர்வதும், சற்றே குறைவதுமாக இருந்து வருகிறது. காற்றில் ஈரப்பதம் குறைந்துள்ள நிலையில், அனல் காற்று வீசுவதால், பொதுமக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, திருச்சியில் அதிகபட்சமாக, 42 டிகிரி செல்சியஸ் (107.6 டிகிரி பாரன்ஹீட்), திருப்பத்தூர், திருத்தணி, 41 டிகிரி செல்சியஸ் (105.8 டிகிரி பாரன்ஹீட்), மதுரை, வேலூரில், 40 டிகிரி செல்சியஸ் (104 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியது.

கடந்த இருதினங்களுக்கு முன் மதுரையில் மழை பெய்த நிலையில், அங்கு நிலவிய வெப்பத்தின் அளவு குறைந்திருந்தது.

மழை இல்லாததால், மீண்டும் வெயில் அதிகரித்தது. நேற்று காலை நிலவரப்படி, திருச்சியில் அதிகபட்சமாக, 42, சேலம், திருத்தணி, வேலூரில், 41. தர்மபுரி, மதுரையில், 40 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியது.

சென்னையிலும், இரு தினங்களாக, வெப்பத்தின் அளவு அதிகரித்துளளது. சென்னை மீனம்பாக்கத்தில், கடந்த சில தினங்களாக, 35 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி வந்தது., வெப்ப நிலை அதிகரித்து, நேற்று காலை நிலவரப்படி, 38 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியது.

அனல் காற்றின் தாக்கம் அதிகரித்ததால், பொதுமக்கள் வெளியில் வருவதை தவிர்த்தனர்.

மழை குறைவு : ஒரு புறம் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்த நிலையில், மறுபுறம் கடந்த இருதினங்களாக கோடை மழை, போக்கு காட்டி வருகிறது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, மழை எங்குமே பெய்யவில்லை.

நேற்று காலை நிலவரப்படி, நெல்லை மாவட்டம், தென் காசியில், ஒரு செ.மீ., மழை பதிவாகியிருந்தது.

கோடை மழை இன்னும் இரு தினங் களுக்கு நீடிக்கும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

## கடல் இனங்கள் விற்பனைக்கு வராததால் ஆந்திரா பண்ணை மீன் விற்பனை ஜோர்

**ஈரோடு**: ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு கடல் மீன்களான வஞ்சிரம், ராட்டு, இறால், சங்கரா உள்ளிட்ட, கடல் மீன்கள் விற்பனைக்கு வராததால், ஆந்திரா பண்ணை மீன்கள் விற்பனை அதிகரித்து, பெரிய சைஸ் மீன்கள், நேற்று கடைகளில் விற்கப்பட்டன. ஈரோடு நகரில் ஈ.வி.என்.,ரோடு ஸ்டோனி பிரிட்ஜ், கருங்கல்பாளையம், அக்ரஹாரம் ஆகிய இடங்களில், மீன் மார்க்கெட்கள் உள்ளன. தவிர, சம்பத் நகர், நசியனூர் ரோடு, சூரம்பட்டி வலசு உள்ளிட்ட இடங்களில், சிறிய மீன்கடைகள், சைக்கிள் மற்றும் பாத்திரங்களில் வைத்து, எடுத்து வந்து வீடுகளிலும், மீன் விற்பனை செய்கின்றனர். நாகை மாவட்டம், கேரளா மாநில மீன்கள், கோவை மார்க்கெட் வழியாக, வஞ்சிரம், இறால், ராட்டு, சங்கரா, விலாங்கு, மத்தி ஆகிய கடல் மீன்களும், மேட்டூர் அணை, ஆந்திரா பண்ணையில் இருந்து, கட்லா, ரோகு, பிலிகொண்டா, கெழுத்தி, நெய்மீன், வாவல், ஜிலேபி, டிஸ்கோ, அயிலா ஆகிய மீன்கள் விற்பனைக்கு வருகிறது. ஈரோட்டில் நாள் ஒன்றுக்கு, ஐந்து டன் மீன்களும், பண்டிகை, விடுமுறை நாள், ஞாயிற்று கிழமை நாட்களில், 12 டன் மீன்கள் வரை, விற்பனைக்கு வருகிறது. மீனவர்கள் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளதால், கடல் மீன் வரத்து வெகுவாக குறைந்து, நேற்று முற்றிலுமாக நின்று போனது. கடல் மீன் வரத்து குறைந்ததை தொடர்ந்து, ஆந்திரா மாநில பண்ணை மீன்கள் வரத்து, அதிகரித்துள்ளது. ஐந்து முதல், ஏழு கிலோ எடை கொண்ட மெகா சைஸ் மீன்கள் கடைகளில் விற்கப்பட்டது. இதுகுறித்து, கருங்கல்பாளையம் மீன் மார்க்கெட் வியாபாரி மணி கூறியதாவது:

ஈரோடு நகரமீன் கடைகளில், 60 சதவீதம் டேம் மற்றும் பண்ணை மீன்களும், 40 சதவீதம் கடல் மீன்களும் விற்பனை செய்கின்றனர். கடலில், மீன் பிடிக்க தடை உள்ளதால், வஞ்சிரம், இறால், நண்டு உள்ளிட்டவை வரத்து முற்றிலும் இல்லாமல் போனது. இதனை ஈடுகட்டும் வகையில், ஆந்திரா பண்ணைகளின், பத்து கிலோ எடை வரையிலான மெகா சைஸ் மீன்கள் விற்கப்படுகிறது. கட்லா, வாவல், பில்கொண்டா ஆகிய மீன்கள் கிலோ, 130 ரூபாய், ரோகு கிலோ, 120 ரூபாய், நெய்மீன் கிலோ, 100 ரூபாய், ஜீலேபி கிலோ, 60 ரூபாய் முதல், 110 ரூபாய், டிஸ்கோ கிலோ, 220 ரூபாய், அயில கிலோ, 150 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. கடல் மீன்கள் வரத்து வரும் வரையில், அணைகளில் தண்ணீர் குறைவதால்,

கட்லா, ரோகு உள்ளிட்ட மெகா சைஸ் மீன்கள் விற்பனைக்கு வரும். இரண்டு மாதத்தில், மீன் விலை கிலோவுக்கு, 20 முதல், 30 ரூபாய் வரைஉயர்ந்துள்ளது.

## வறட்சியில் கை கொடுக்கும் சொட்டுநீர் பாசனம் : பனமரத்துபட்டியில் 80 ஹெக்டேரில் பயிர் நடவு

**பனமரத்துப்பட்டி**: பனமரத்துப்பட்டி வட்டாரவிவசாயிகள், தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்க, சொட்டு நீர் பாசனத்திற்கு மாறியுள்ளனர். 80 ஹெக்டேர் பரப்பளவில், அரளி, மரவள்ளி, கத்தரி உள்ளிட்ட பயிர்கள், சொட்டு நீர் பாசனத்தில், நடவு செய்யப்பட்டுள்ளது. பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்படுகிறது. இப்பகுதியில், அரளி, குண்டு மல்லி, மரவள்ளி, கொய்யா, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் நடவு செய்யப்படுகிறது.

சில ஆண்டுகளாக, போதிய மழை இல்லாததால், பனமரத்துப்பட்டி ஏரி வறண்டு கிடக்கிறது. ஏரியை சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில், நிலத்தடி நீர்மட்டம், 1,000 அடிக்கு கீழ் சென்றதால், விவசாய கிணறுகள் வறண்டு விட்டன. பல கிராமங்களில், வறட்சியால், அரளி, மரவள்ளி, குண்டுமல்லி உள்ளிட்ட பயிர்கள் மடிந்து வருகின்றன. வறட்சியால் வாடிய விவசாயிகளுக்கு, சொட்டு நீர் பாசனம், கை கொடுத்துள்ளது. கிணறு, போர்வெல் ஆகியவற்றில் கிடைக்கும் குறைந்த அளவு தண்ணீர் மூலம், சொட்டு நீர் பாசனம் அமைத்து, மரவள்ளி, அரளி, கத்தரி, குண்டுமல்லி, சம்பங்கி, மஞ்சள், தர்பூசணி, முலாம் பழம், கொய்யா உள்ளிட்ட பயிர்களை, விவசாயிகள் நடவு செய்துள்ளனர்.

பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், மொத்தம், 80 ஹெக்டேர் பரப்பளவில், தோட்டக்கலைத்துறையின் மானியத்தில், சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 64 ஹெக்டேர், 100 சதவீத மானியத்திலும், 16 ஹெக்டேர், 75சதவீத மானியத்திலும் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகள் கூறியதாவது:

மழையின்றி, கடும் வறட்சி ஏற்பட்டதால், கிணறு, போர்வெல் ஆகியவற்றில் மிக குறைந்த அளவு தண்ணீரேஉள்ளது. கிணற்றில் இருந்து வாய்க்கால் மூலம் வயலுக்கு கூட தண்ணீர் போய் சேரமுடியாத பற்றாக்குறை உள்ளது. தோட்டக்கலைத்துறை மூலம், மானியத்தில், சொட்டு நீர் பாசனம் அமைத்து, பயிர்

செய்து வருகிறோம். தற்போது, ஒரு டேங்க் தண்ணீர் வைத்து, சொட்டு நீர் பைப் போட்டு, ஒரு ஏக்கரில் உள்ள பயிருக்கு விடுகிறோம். சொட்டு நீர் பாசனத்தால், வயலில் தேவையில்லாத புல், களைகள் முளைப்பதில்லை. உரம், மருந்து ஆகியவற்றை, சொட்டு நீர் பைப் மூலம் பயிர்களுக்கு போட்டு விடுகிறோம். இதனால், பரமரிப்பு செலவு குறைந்து, பயிர்களுக்கும் நன்றாக செழித்து வளர்கிறது. தற்போது, நாலுக்கு இரண்டு என்ற விகிதத்தில், சொட்டு நீர் பைப், வயலில் போடுகின்றனர். அதை, மூன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் போட்டுக் கொடுத்தால், சிறிய பயிர்கள், நன்றாக வளரஉதவும். இவ்வாறு கூறினர்.

### இடைப்பாடி பகுதியில் கடும் வறட்சி 10 ஆயிரம் பனை மரங்கள் கருகியது

இடைப்பாடி: இடைப்பாடி மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பனை மரங்கள் கருகியது. வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். சேலம் மாவட்டத்தில், மூன்று ஆண்டுகளாக, கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு, அதிகபட்ச வெயில் வாட்டி வதைத்து வருகிறது.

பருவமழை பொய்த்து போனதால், நிலத்தடி நீர் மட்டமும் படுபாதாளத்துக்கு சென்றுவிட்டது. இடைப்பாடி, கொங்கணாபுரம் பகுதிகளில், ஆடையூர், இருப்பாளி, இடைப்பாடி, நாச்சூர், கோரணம்பட்டி, கன்னியாம்பட்டி, சானாரப்பட்டி, தளவாய்ப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளது.

முப்பது ஆண்டு வயதுடைய பனைமரங்கள் கூட, கடும் வறட்சி காரணமாக, கருகி வருகிறது. கொங்கணாபுரம் ஒன்றிய பகுதிகளில் உள்ள, 7,000க்கும் மேற்பட்ட பனை மரங்கள், தற்போது கருகியுள்ளது.

அதனால், நூற்றுக்கணக்கான விவசாயிகளும், பனைமரத் தொழில் செய்பவர்களும், தங்களது வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். எனவே, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விளைச்சல் குறைவால் தக்காளி விலை உயர்வு

**நரசிங்கபுரம்**: ஆத்தூர் பகுதியில், கடும் வறட்சி, சுட்டெரிக்கும் கோடை வெயிலால், தக்காளி விளைச்சல் குறைந்து, விலை கிடுகிடுவென உயர்ந்தது. ஆத்தூர் பகுதியில், இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால், ஆறு, கிணறு போன்ற நீர் நிலைகள் வறண்டு கிடக்கிறது. அதனால், பாசன பயிர்கள், தண்ணீர் இல்லாமல் காய்ந்து வருகிறது. இதில், ஆத்தூர், நரசிங்கபுரம், பெத்தநாயக்கன்பாளையம், ராமநாயக்கன்பாளையம், தென்னங்குடிப்பாளையம், மல்லியக்கரை, தாண்டவராயபுரம் உள்ளிட்ட பகுதிகளில், தக்காளி செடிகள், காய்ந்து கருகுவதால், தக்காளி விளைச்சல் குறைந்து விட்டது. அதனால், இரு மாதங்களுக்கு முன், ஒரு கிலோ தக்காளி ஒரு ரூபாய் முதல், இரண்டு ரூபாய் விற்பனை செய்த நிலையில், தற்போது, கிலோ, 10 முதல், 15 ரூபாய் என விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

## கச்சிராயப்பாளையத்தில் வெள்ளரி பழம் விற்பனை

**கச்சிராயபாளையம்**: கோமுகி அணையில் வெள்ளரிப் பழம் விற்பனை கன ஜோராக நடக்கிறது. கச்சிராயபாளையம் அடுத்த கோமுகி அணையில் மானாவாரி பயிராக வெள்ளரி பயிர் செய்யப்பட்டுள்ளது. தற்போது வெள்ளரி பழங்கள் அறுவடை செய்யப்படுதால், இப்பகுதியில் வெள்ளரி பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. கோடைகால கனிகளான தர்பூசணி, கிர்ணி, வெள்ளரி போன்ற பழ வகைகள் வெயிலின் தாக்கத்தை குறைப்பதால், இந்த வகை பழங்களை மக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். இதையடுத்து கோமுகி அணையில் வெள்ளரிப் பழம் விற்பனை கன ஜோராக நடக்கிறது.

## கள்ளக்குறிச்சி பகுதியில் பலாப்பழ விற்பனை "ஜோர்'

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சியில் பலாப்பழ விற்பனை விறுவிறுப்பாக நடந்து வருகின்றது. பலாப்பழத்திற்கு பெருமை பெற்ற பண்ருட்டியில் தானே புயல் பாதிப்பு காரணமாக, விளைச்சல் குறைந்து போனது. இருப்பினும், மா, பலா போன்ற பழங்களின் சீசனான கோடை காலத்தில், புதுக்கோட்டை பகுதி ஆவினங்குடியிலிருந்து, பிற பகுதிகளுக்கு பலாப்பழங்கள் விற்பனைக்கு கொண்டு

வரப்படுகிறது. இந்த பலாச்சுளைகளை கள்ளக்குறிச்சி நகரின் சாலையோரம் தள்ளு வண்டிகளில் வைத்து கால் கிலோ 20 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்கின்றனர். சிறிய பிளாஸ்டிக் பைகளில் வைத்து, 10 ரூபாய் என, உளுந்தூர்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி டோல்கேட் பகுதிகளிலும் விற்பனை செய்து வருகின்றனர். பண்ருட்டியி பகுதியிலிருந்து பலாப்பழம் வரத்து குறைந்துபோனதால், புதுக்கோட்டையிலிருந்து கொண்டு வரப்படும் இந்த பலாப்பழங்கள் விலை சற்று உயர்ந்துள்ளது. இருப்பினும், சீசன் காலத்தில் மட்டுமே கிடைக்கக் கூடிய பலாப்பழத்தை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். ஒரு முழு பலாப் பழம் 300 முதல் 400 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். இருந்தாலும் ஏராளமான மக்கள் பலாச்சுளைகளையே வாங்கிச் செல்வதில் ஆர்மாக உள்ளனர்.

## பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து தொடர் சரிவு

**கோபி**: பவானிசாகர் அணை தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணையாகும். இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில், சேறும், சகதியும் போக, அணையின் மொத்த நீர் பிடிப்பு உயரம், 105 அடியாகும். அணையில் மொத்த கொள்ளளவு, 32 டி.எம்.சி.,யாகும். இந்த அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் வெளியேறும் தண்ணீர் மூலம், 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலமும், பவானி ஆற்றில் வெளியேறும் தண்ணீர் மூலம், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறுகிறது. கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்காக, உயிர் நீராக, 2,000 கனஅடி திறக்கப்பட்டுள்ளது. இதனால், அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது. தவிர, குடிநீருக்காக மட்டுமே, பவானி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, அணையில் நீர் மட்டம், 42 அடியாகும். அணைக்கு வினாடிக்கு, 503 கனஅடி தண்ணீர் வந்தது. பவானி ஆற்றுக்கு, 200 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலுக்கு, ஐந்து கனஅடி நீரும் திறந்து விடப்பட்டது. நேற்று முன்தினம், மாலை, நான்கு மணி நிலவரப்படி, அணைக்கு வினாடிக்கு, 205 கனஅடி தண்ணீர் வந்தது. பவானி ஆற்றுக்கு, 200 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலுக்கு, ஐந்து கனஅடி

திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் பிடிப்புபகதிகளில் போதிய மழை இல்லாததால், அணையின் நீர் வரத்து சரிந்து வருகிறது.

## பலா பழங்களுக்கு கடும் கிராக்கி

**ஆலங்குடி**: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியை அடுத்த வடகாடு பகுதியில் விளையும் பலா பழங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிக சுவையுள்ள பலா பழங்களாக பண்ருட்டியைச் சொல்வார்கள். அதற்கு அடுத்தபடியாக ஆலங்குடியைச் சுற்றி உள்ள பகுதிகளான வடகாடு, கீழாத்தூர், மேலாத்தூர், வெட்டன்விடுதி, மாங்காடு, அணவயல், கீரமங்கலம் செரியலூர், கொடிக்கரம்பை, பனங்குளம், குளமங்கலம், கொத்தமங்கலம், மறமடக்கி ஆகிய பகுதிகளில் விளையும் பலா பழங்கள் நல்ல சுவையுள்ளதாக இருக்கும். சீஸன் காலங்களில் இப்பகுதியில் விளையும் பலா பழங்களை இங்கிருந்து மற்ற மாவட்டங்களுக்கு மட்டுமல்லாது வெளி மாநிலங்களுக்கும் கொண்டு செல்வது வழக்கம்.

அவ்வாறு கொண்டு செல்லும் பலா பழக்கங்கள் பண்ருட்டி மட்டுமல்லாது இங்கிருந்து லாரியில் கொண்டு செல்லப்படுவதால் விவசாயிகள் ஏலக்கடைகளுக்குக் கொண்டுவந்து விடுவார்கள். அங்கிருந்து கமிஷன் அடிப்படையில் வெளியூர் வியாபாரிகளுக்கு விற்கப்படும். விவசாயிகளுக்கு உரிய முறையில் உரிய நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படும்.

ஆண்டுதோறும் இதுபோல் விற்கப்பட்டு வந்தாலும் கடந்தாண்டு வீசிய தானே புயலில் கடலூர் மாவட்டத்தை இயற்கைச் சீற்றம் அழித்ததில் அப்பகுதியில் இருந்த பலா மரங்கள் வேரோடு பிடுங்கி வீசப்பட்டதில் பண்ருட்டி பலா என்பது வெறும் கனவாகிப் போய்விட்டது.

வெளிமாநிலங்களில் இருந்து பலா பழம் கேட்டு வரும் ஆர்டர்களுக்கு வடகாடு, கைகாட்டி, கீரமங்கலம், கொத்தமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள பலா பழங்களைத்தான் வியாபாரிகள் கொண்டு சென்று சேர்க்கிறார்கள்.

இந்தாண்டும் இப்பகுதியில் பருவமழை பொய்த்து விட்டதால் விளைச்சல் வழக்கமானதை விட மிகவும் குறைந்துவிட்டது. பலாப்பழங்களின் அளவும் சிறியதாகி விட்டது. ஆழ்குழாய்க்கிணறு மூலம் விவசாயம் செய்யும் தோட்டப்பகுதியில் வரப்புகளில் இருக்கும் மரங்களில் மட்டும் காய்த்திருக்கிறது.

பெரும்பாலான மரங்கள் பட்டு விட்டன. அதனால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பலா பழங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஒரு பழம் குறைந்தது, 150 ரூபாய் முதல், 600 ரூபாய் வரை விற்கிறது. அதனால் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் கமிஷன் கடைக்காரர்களுக்கும் மகிழ்ச்சி என்ற போதிலும் போதிய மழையில்லாமல் விளைச்சலும், பருமனும் குறைந்ததோடு மரங்களும் பட்டு விட்டதில் மக்கள் மிகவும் சோகமாகி போய் விட்டார்கள். வரும் ஆண்டிலும் பருவ மழை பொய்த்துவிட்டால் கடலூரில் புயலால் பலா மரங்கள் காணாமல் போனதுபோல் ஆலங்குடியைச் சுற்றியுள்ள பகுதியில் வறட்சியால் காணாமல் போகும் அபாயமும் உள்ளது.

## சிறுதானியங்கள் பயன்பாடு குறைவு வேளாண் துறை இயக்குனர் வேதனை

**தஞ்சாவூர்**: "சமூகத்தில் கிராமப்புற மனிதர்களிடையே முன் முழுநேர உணவாக பயன்பாட்டில் இருந்த சிறுதானியங்கள் பயன்பாடு, தற்போதைய சூழலில் அறவே இல்லாமல் திடீரென காணாமல் போய்விட்டது' என, தஞ்சையில் தனியார் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் சென்னை வேளாண் துறை இயக்குனர் ராஜேந்திரன் பேசினார்.

தஞ்சை புது பஸ் ஸ்டாண்ட் அருகேயுள்ள பாரத் அறிவியல் மற்றும் நிர்வாகவியல் கல்லூரியில், 11வது பட்டமளிப்பு விழா நடந்தது. இதில், பாரத் கல்விக்குழும செயலாளர் புனிதா தலைமை வகித்தார். முதல்வர் வீராசாமி ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக பங்கேற்று, சென்னை வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன், 499 மாணவ, மாணவியருக்கு பட்டம் வழங்கி பேசியதாவது:

விவசாயத்தை பொறுத்தவரை அதிக வருமானம் தரும் தொழிலாக இல்லை. அதனால், இத்தொழிலில் ஈடுபட பலரும் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால், இத்தகைய குறைபாட்டையும் நிவர்த்தி செய்து, இன்றைய இளைஞர்கள் விவசாயத்தை லாபகரமிக்க தொழிலாக முன்னேற்றம் பெற செய்துள்ளனர். தமிழகத்திலுள்ள கிராமப்புறங்களில் மக்கள் முன்பெல்லாம், சோளம், திணை, கம்பு, கேழ்வரகு ஆகிய சிறுதானியங்களை அதிகளவில் முழுநேர உணவாகவே உட்கொண்டு வந்தனர். ஆனால், அத்தகைய நிலைமை தற்போது அடியோடு மாறிவிட்டது. சிறுதானிய பயன்பாடு முற்றிலும் இல்லாமல், காணாமல்

போய்விட்டது. ஆனாலும், வேளாண்மைத்துறை மூலம் சிறுதானிய உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெற்கதிரில் பூச்சி தொல்லையால், ரசாயன மருந்து அடிக்கின்றனர். இதனால், தீமை செய்யும் பூச்சியுடன் நன்மை செய்யும் பூச்சியும் சேர்ந்து இறந்து விடுகின்றன. இதற்கு, மாற்று ஏற்பாடாக, நன்மை செய்யும் பூச்சியை காப்பாற்ற வயல்களில் பூச்செடிகளை வளர்க்க வேண்டும். இதன்மூலம் நன்மை செய்யும் பூச்சிகள் மூலமாக பயிருக்கு உரிய பலனை பெற்றுத்தர வாய்ப்பை ஏற்படுத்தலாம்.இவ்வாறு, அவர் பேசினார்.

## நத்தத்தில் மழை இல்லாததால் மா விளைச்சல் பாதிப்பு

**நத்தம்** : நத்தம் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டாக மழை இல்லாததால், மா மரங்கள் விளைச்சல் இன்றி உள்ளன. மார்க்கெட் டி ற்கு மாங்காய் வரத்தும் குறைந்துள்ளது.

தமிழகத்தில் மா விளைச்சலுக்கு பெயர்பெற்ற கிருஷ் ணகிரி,தருமபுரி,சேலம்,பெரியகுளம் ஆகிய ஊர்களை போல, நத்தம், சாணார்பட்டி பகுதிகளிலும் மா விளைச்சல் அதிகமாக உள்ளது.இங்கு மா விளைச்சலுக்கேற்ற மண் வகைகள் உள்ள தால், இங்கு விளையும் மா பழங்கள் நல்ல ருசியாக இருக்கும். இங்கு மார்ச் முதல் ஜூலை வரை சீசன் இருக்கும்.

இந்த பகுதியில், கட ந்த இரண்டு ஆண்டாக மழையில்லாத தால், 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் உள்ள மா மரங்கள் 50 சதவீதம் விளைச்சல் இன்றி உள்ளன. மீதியுள்ள மரங்களில் மழை இன்றி விளைச்சல் குறைவாக உள்ளது. மா மரங்களில் விளைச்சலுக்காக, குத்தகைதாரர்கள் பல லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது. பல இடங்களில் லாரிகளில் தண்ணீர் வாங்கி மரங்களுக்கு பாய்ச்சுகின்றனர். இது குறித்து வேம்பார்பட்டி மா கமிஷன் மண்டி உரி மையாளர் ஹரிகரன் கூறுகையில்," மழை இல்லாததால், மா மரங்கள் பட்டுப்போய் விளை ச்சல் பாதித்துள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு மிக குறைவாக மாங்காய்கள் வரத்துள்ளது. இதனால் செந்தூரம் கிலோ ரூ.18க்கும், பங்கன பள்ளி ரூ.32க் கும், இமாம்பசந்த் ரூ.60க்கும், காதர் ரூ. 40க்கும்,கிரேப்ரூ.18க்கும், கல்லாமை ரூ.16 க்கும். நாட்டுக்காய்கள் ரூ.6க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. வரத்து குறைவால் பல லட்சம் செலவழித்து மருந்து தெளித்து, தண்ணீர் பாய்ச்சிய மா

விவசாயிகள், குத்தகை தாரர்களும் நஷ்டமடைந்துள்ளனர். இந்தாண்டு மா சீசன் வரும் ஜூன் மாதத்திற்குள் முடிந்து விடும், என்றார்.

## ஒட்டன்சத்திரத்தில் எலுமிச்சை விலை உயர்வு

**ஒட்டன்சத்திரம்** : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து குறைந்ததால், ஒரு கிலோ எலுமிச்சை ரூ.130க்கு விற்றது.கடந்த சில ஆண்டுகளாக மழை இல்லாததால், வெயிலின் தாக்கம் அதிகரிதுள்ளது. வீசும் காற்றும் அனல் காற்றாக உள்ளது. இதனால் மக்கள் குளிர்பானங்கள், பழ ரசங்களை குடித்து வெப்பத்தை தணித்து வருகின்றனர். வீட்டில் ஜூஸ் தயாரிக்க நாம் அதிகம் விரும்பி வாங்கிச் செல்வது எ<லுமிச்சை பழத்தைத்தான். ஒரு பழத்தில் ஜூஸ் போட்டால் 3 பேர் குடிக்கலாம். தற்போது ஒரு எலுமிச்சை விலை ரூ.8க்கு விற்கப்படுகிறது. கடந்த 3 மாதத்திற்கு முன்பு ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் ஒரு கிலோ எலுமிச்சை ரூ.30 லிருந்து ரூ.40 வரை விற்றது. ஆனால் தற்போது அதிக பயன்பாடு, வரத்து இல்லாத காரணத்தால் இதன் விலை அதிகரித்துரூ.80 லிருந்து ரூ.130 வரை விற்கிறது.

## எலுமிச்சை பழம் விலை கடும் உயர்வு; ஒரு கிலோ ரூ.150க்கு விற்பனை

ஸ்ரீவில்லிபுத்துார் : ஸ்ரீவில்லிபுத்துாரில், எலுமிச்சை பழம் விளைச்சல் இல்லாததால், ஒரு கிலோ 150 ரூபாய்க்கு விற்பனையானது.

மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதியான செண்பகதோப்பு, பந்தப்பாறை, மம்சாபுரம், குட்டதட்டி பகுதிகளில், 500க்கும் அதிகமான ஏக்கரில், விவசாயிகள் எலுமிச்சை செடிகளை நடவு செய்து, விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக மழை இல்லாத நிலையிலும், கிணறுகளில் கிடைக்கும் சிறிதளவு நீரை வைத்து விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் இப்பகுதியில் பெய்த ஆலங்கட்டி மழையால், இப்பகுதி எலுமிச்சை செடிகளில், கிடந்த காய்கள் அனைத்தும் கீழே விழுந்தது. இதனால், இதன் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது. சந்தையில் எலுமிச்சை பழம் வருகையும் குறைந்து போனது. இந்நிலையில், நேற்று ஸ்ரீவில்லிபுத்துார் மார்க்கெட்டில் ஒரு கிலோ எலுமிச்சை பழம் 150 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த விலை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.பெட்டிக்கடை

உரிமையாளர் சரவணன்,"" நேற்று முன்தினம் வரை, கிலோ 90 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட எலுமிச்சை பழம், நேற்று, 150 ரூபாய்க்கு விற்பனையானது. ஒரு கிலோ விற்கு அதிகபட்சம் 20 பழங்கள் தான் கிடைக்கும். இதனால், ஒரு பழம், 10 ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலை உள்ளது," என்றார்.விவசாயி கந்தையா,"" கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த ஆலங்கட்டி மழையால், எலுமிச்சை மரத்தில் இருந்த பிஞ்சுகள் உட்பட அனைத்து காய்களும் கீழே விழுந்து விட்டது. இதனால், மிக குறைவான எலுமிச்சை பழங்களே கிடைத்து வருகிறது. கடந்தாண்டு ஏப்ரல் மாதத்தில் நாளொன்றுக்கு 40 கிலோ வரை விளைந்தது. ஆனால், தற்போது ஏழு கிலோ கூட கிடைக்காத நிலை உள்ளது," என்றார்.

## நெத்தலி மீன் சீசன் துவக்கம்

**நாகர்கோவில்** : குளச்சல் கடல் பகுதியில் சுமார் 300 விசைபடகுகளும், 1000-க்கும் மேற்பட்ட பைபர் வள்ளம், கட்டுமரங்களும் உள்ளன. இதில் விசைப்படகுகள் ஆழ்கடல் பகுதி வரை சென்று 10 முதல் 15 நாட்கள் தங்கியிருந்து மீன்பிடித்து கரைதிரும்புவது வழக்கம். இந்த ஆழ்கடல் பகுதியில்தான் உயர்ரக மீன்களாகிய கணவாய், இறால், கேரை, சுறா, போன்ற மீன்கள் கிடைக்கும். தற்போது விசைப்படகில் கேரை போன்ற மீன்கள் கிடைத்து வருகினறன. நேற்று 7 விசைப்படகுகள் மீன்பிடித்து கரை திரும்பின. அந்த விசைப்படகுகளில் கேரை மீன்கள், கொழிச்சாளைகளும் கிடைத்தன. இவற்றை கேரள மற்றும் உள்ளூர் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். இதற்கிடையே கட்டுமர மீனவர்களின் வலையில் நேற்று நெத்தலி மீன்கள் கிடைக்கதுவங்கியுள்ளன. ஒரு கட்டுமரத்தில் பிடிக்கப்பட்ட நெத்தலி மீன்கள் ரூ. 3 ஆயிரம் முதல் ரூ. 4 ஆயிரம் வரை விலை போனது. தற்போது நெத்திலி மீன்சீசன் துவங்கியதை அடுத்து கட்டுமர மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகள் மகிழ்ச்சி மஞ்சள் ஏலம் அமோகம்




**திருச்செங்கோடு**: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் ரூ.80 லட்சத்திற்கு ஏலம் போனது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று ஏலம் நடந்தது.

இதில், ஆத்தூர், கெங்கவல்லி, கள்ளக்குறிச்சி, அரூர், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நேற்று 2,000 மூட்டை மஞ்சள் கொண்டு வந்தனர். மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய இடங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகளும் வந்தனர்.

ஏலத்தில், விரலி ரகம் குவிண்டால் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.8,900 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் யி6 ஆயிரம் முதல் ரூ.7,500 வரை விற்பனையானது.


பனங்காளி ரகத்திற்கு ரூ.9 ஆயிரம் முதல் ரூ.14 ஆயிரம் வரை விலை கிடைத்தது. மொத்தம் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள், ரூ.80 லட்சத்திற்கு ஏலம் போனது. பனங்காளி ரகத்திற்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**ரூ.75 லட்சத்துக்கு பருத்தி விற்பனை**



**இடைப்பாடி**: சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே உள்ள கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனைச் சங்கம் உள்ளது. இந்த சங்கத்தில் செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் ஏலம் நடைபெறுகிறது. கடந்த சில வாரங்களாக பஞ்சு வரத்து குறைவால், 3 நாட்களில் ரத்து செய்யப்பட்டு, ஒரு நாள் மட்டுமே ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் ஏலத்தில் பெங்களூர், ஓசூர், திருவண்ணாமலை, ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டனர். ஏலத்திற்கு 3 ஆயிரம் மூட்டை பருத்தி, இதில், ரூ.75 லட்சத்துக்கு ஏலம் போனது. பி.டி ரகம் ரூ.4,900 முதல் ரூ.5,850 வரை விற்பனையானது. டிசிஎச் ரகம் ரூ.5,600 முதல் ரூ.6,850 வரை விற்பனையானது.

**கறிக்கோழி விலை மீண்டும் உயர்வு**



**கோவை:** கறிக்கோழி நுகர்வு அதிகரிப்பை தொடர்ந்து பண்ணை மொத்த கொள்முதல் விலை கிலோ ரூ.68லிருந்து ரூ.75க்கு உயர்ந்துள்ளது. சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி கிலோ ரூ.140லிருந்து ரூ.160க்கு உயர்ந்துள்ளது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் கேரளாவுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

உற்பத்தியாளர்கள் கறிக்கோழி விலையை தினசரி நிர்ணயித்து வருகின்றனர். அதன்படி பண்ணை மொத்த கொள்முதல் விலை, உயிருடன் சில்லரை விலை, தோலுடன் கறி விலை, தோல் நீக்கிய கறி விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த 22ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை கறிக்கோழி பண்ணை மொத்த கொள்முதல் விலை ரூ.68 ஆகவும், சில்லரை விலையில் உயிருடன் கிலோ ரூ.83ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.118ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.138 ஆகவும் இருந்தது. இந்த விலை நேற்று முன்தினம் முதல் அதிகரித்தது. நேற்று (27ம் தேதி) பண்ணை மொத்த கொள்முதல் விலை ரூ.75ஆகவும், சில்லரை விலையில் உயிருடன் கிலோ ரூ.90 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.130 ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.152ஆகவும் உயர்ந்தது. பெரும்பாலான சில்லரை விற்பனை கடைகளில் ரூ.160 வரை விற்கப்பட்டது. விலை உயர்வுக்கு கறிக்கோழி நுகர்வு அதிகரிப்பே காரணம் என்கின்றனர் உற்பத்தியாளர்கள்.

**பூண்டு வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.40க்கு விற்பனை**



**சேலம்**: வட மாநிலங்களில் இருந்து பூண்டு வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. ஒரு கிலோ பூண்டு ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இந்தியாவில் மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பூண்டு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாநிலங்களில் இருந்து இந்தியா முழுவதும் பூண்டு அனுப்பப்படுகிறது. வட மாநிலங்களில் பூண்டு நல்ல விளைச்சலை தந்துள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக பூண்டு வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்து வருகிறது. இது குறித்து செவ்வாய்பேட்டை பூண்டு வியாபாரிகள் கூறியதாவது: நடப்பாண்டு வடமாநிலங்களில் பூண்டு நல்ல விளைச்சலை தந்தது. இதனால் அங்கிருந்து தினசரி 50 டன் பூண்டு சேலம் லீ பஜார், செவ்வாய்பேட்டைக்கு வந்து கொண்டிருந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ.50 முதல் ரூ.60 என விற்பனை செய்யப்பட்டது.

தற்போது சேலம் மார்க்கெட்டுக்கு அதிகமாக பூண்டு வந்து கொண்டிருக்கின்றன. இதனால் அதன் விலை குறைந்து ரூ.40 முதல் ரூ.50 என விற்பனை செய்யப்படுகிறது. நீலகிரி பூண்டு ரூ.70 என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு பூண்டு வியாபாரிகள் கூறினர்.

**கடும் வறட்சியால் மலர் சாகுபடி பாதிப்பு**



**சங்கரன்கோவில்:** நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

சங்கரன்கோவில் மற்றும் சுற்றுப்பகுதிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் மல்லி, பிச்சி, சம்பங்கி, கேந்தி, ரோஜா, சேவல், கனகாம்பரம் உள்ளிட்ட மலர்களை அதிகளவு சாகுபடி செய்கின்றனர். ஆற்றுப்பாசனமோ, கால்வாய் பாசனமோ இல்லாத இப்பகுதியில் கிணறு மற்றும் குளம், கண்மாய் தண்ணீரை மட்டும் நம்பியே விவசாயிகள் மலர் சாகுபடியில்

ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதியில் பருவமழை தொடர்ந்து பெய்யாததால் குளங்கள் தண்ணீரின்றி வறண்டதுடன் கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது.

ஆண்டாண்டு காலமாக மலர் சாகுபடி செய்து வரும் ஒரு சில விவசாயிகள் மட்டும் வேறு வழியின்றி ஆழ்துளை கிணறுகள் அமைத்து அதன் மூலம் சாகுபடியை தொடர்கின்றனர். தண்ணீரின்றி பல நூறு ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மலர் செடிகள் கருகியதால் இப்பகுதியில் பூ விளைச்சல் நலிவடைந்து வருகிறது.

இதனால் சங்கரன்கோவில் பூ மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து வெகுவாக குறைந்து வருகிறது. சுப முகூர்த்த தினங்களில் பிச்சி, மல்லி, கனகாம்பரம் ஆகிய மலர்கள் ஒரு கிலோ ரூ.1500 முதல் ரூ.2000 வரை விற்பனை செய்யப்படுகிறது. இப்பகுதியில் கேந்தி, பிச்சி, ரோஸ் ஆகிய பூக்கள் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால், ஒசூரில் இருந்து கேந்தியும், மதுரை மற்றும் உதகையில் இருந்து பிச்சி, ரோஜா மலர்களும் சங்கரன்கோவில் பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன.

இதுகுறித்து வடக்கு ரதவீதியை சேர்ந்த விவசாயி முருகன் கூறியதாவது: முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சங்கரன்கோவில் பகுதியில் தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் கிணறுகளில் கூட தண்ணீர் இல்லை. நாங்கள் எங்கள் நிலத்தில் மல்லிகை சாகுபடி செய்துள்ளோம். ஆழ்துளை கிணறு அமைத்து அதிலிருந்து கிடைக்கும் தண்ணீரை கொண்டு மல்லிகை செடிகளை காப்பாற்றி வருகிறோம்.

கோடை வெயில் வறுத்தெடுப்பதால் எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினாலும் மலர் செடிகளை பாதுகாக்க முடியவில்லை. பலவாறாக சிரமப்பட்டு விளைவிக்கும் நிலையில் சில நேரம் மல்லிகைப்பூக்கள் அதிகளவு விவசாயிகளால் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுவதால் செலவுத்தொகை கூட கைசேராத அளவுக்கு விலை குறைந்து விடுகிறது. விதி விலக்காக முகூர்த்த காலங்களில் மட்டும் பூக்களுக்கு ஓரளவு நல்ல விலை கிடைக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

**விளைச்சல் பாதிப்பால் மாம்பழம் விலை 2 மடங்காக எகிறியது**




**திருச்சி**: மாம்பழம் விளைச்சல் குறைவால் இந்த வருடம் அதன் விலை 2 மடங்கு அதிகரித்துள்ளது.

மாம்பழம் சீசன் தொடங்கியுள்ள நிலையில் மதுரை, கும்பகோணம், கரூர், துவரங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து திருச்சி காந்திமார்க்கெட்டுக்கு மாம்பழம் விற்பனைக்கு வருகிறது.

மாம்பழ ரகங்களான இமாம்பசந்து, பங்கனப்பள்ளி, செந்துீரம், மல்கோவா, அல்போன்சா உள்ளிட்ட ரகங்கள் ஸ்ரீரங்கம் மாம்பழச்சாலை, திருச்சி காந்திமார்க்கெட்டில் குவிக்கப்பட்டுள்ளன.

மாம்பழ மண்டியில் கடந்த வருடம் ஒரு கிலோ ரூ.60க்கு விற்று வந்த இமாம்பசந்து ரூ.120 வரையிலும், யி35க்கு விற்ற பங்கனபள்ளி ரூ.70க்கும், ரூ.20க்கு விற்ற செந்துீரம் ரூ.40க்கும் விற்கப்படுகிறது.

இது குறித்து மாம்பழ வியாபாரிகள் கூறுகையில்,

'தற்போது மாம்பழ சீசன் ஆரம்பம் என்பதால் குறைவான பழங்களே வருகிறது. கடந்த வருடம் விளைச்சல் அதிகம் இருந்ததால் அதன் விலையும் குறைவாக இருந்தது.

இந்த வருடம் போதிய மழை இல்லாதால் விளைச்சல் பாதியாகவிட்டடது. எதிர்பார்த்த அளவுக்கு மாம்பழம் வரத்து இல்லை.

அதனால், விலையும் 2 மடங்கு உயர்ந்துள்ளது' என்றனர்.

**சாமந்திக்கு கடும் தட்டுப்பாடு: மாலைகளின் விலை கிடுகிடு உயர்வு**



**சென்னை:** சாமந்தி பூக்களின் வரத்து குறை வால் மாலைகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதுகுறித்து கோயம்பேடு பூ வியாபாரிகள் கூறுகையில், "கோடைக்காலம் என்பதால் கடுமையான வறட்சி மற்றும் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் குறைந்த அளவே பூக்களை சாகுபடி செய்துள்ளனர். இதனால் சென்னை கோயம்பேட்டிற்கு பூக்களின் வரத்து குறைந்துள்ளது. குறைந்த அளவாக 200 கிலோ மட்டுமே சாமந்தி பூவும், 150 கிலோ ரோஜா பூவும் வருகிறது.

இதனால் சாமந்தி மற்றும் ரோஜாவுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவற்றால் மாலைகளின் விலையும் தற்போது கடுமையாக உயர்ந்துள்ளது. ரூ.150க்கு விற்ற சிறிய மாலை தற்போது ரூ.250க்கும், ரூ.200க்கு விற்ற மாலை ரூ.400க்கும் விற்கப்படுகிறது" என்றனர்.

**கரூர் பூ மார்க்கெட்டில் பூக்கள் வரத்து குறைவு**

**கரூர்**, : கரூர் பூ மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைந்த நிலையிலும் விலை கிடைக்காததால் வியாபாரிகள் கவலையில் உள்ளனர்.

கரூர் மாரியம்மன் பூ மார்க்கெட்டுக்கு கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், நொய்யல், நாமக்கல் மாவட்டம் பரம த்தி, வேலூர், திண்டுக்கல் மாவட்டம் பாளையம், குஜிலியம்பாறை உள்ளிட்ட ஊர்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. வறட்சி கார ணமாக பூக்களின் விளைச் சல் பாதிக்கப்பட்டுள்ளது. பின்னர் காவிரி நீர்வரத்து காரணமாக விளைச்சல் அதிகமானது. கார்த்திகை மார்கழி, தை மாதங்களில் பூக்களின் விலை மிக

அதிகமானது. முகூர்த்தம் கார ணமாக கடந்த வாரமும் அதிகவிலைக்கு பூக்கள் ஏலம்போனது. மல்லிகைப்பூ கிலோ ரூ.500க்கு மேல் போனது. நேற்று பூக்களின் விலை வெகுவாக குறைந்துவிட்டது. ஒரு கிலோ மல்லிகை ரூ.200, ஜாதிப்பூ ரூ.250, மருவு ரூ.40, ரோஜா ரூ.70, கனகாம்பரம் ரூ.150, செவ்வந்தி ரூ.120, கோழிகொண்டை ரூ.50, சம்பங்கி ரூ.200க்கு விலைபோனது. ஆனால், கடந்த சில மாதங்களாக வறட்சி காரணமாக பூக்களின் வரத்து குறைந்துவிட்டது. முகூர்த்தம் இருந்ததால் ஓரளவுக்கு விலை கிடைத்து வந்தது. ஆனால், தற்போது வரத்து குறைந் தும், விலையும் கிடைக்காத நிலை உள்ளதாக கரூர் பூ மார்க்கெட் சங்க தலைவர் முருகேசன் தெரிவித்தார்.

நேற்று மல்லிகைப்பூ கிலோ ரூ.120, ரோஜா ரூ.80, சம்பங்கி ரூ.100, மருவு ரூ.50, மரிக்கொழுந்து ரூ.50, அரளி ரூ.150, விருட்சை ரூ.60 என ஏலம்போனது. கடந்த வாரம் கிடைத்த விலையை விட பாதியாக விலை குறைந்துள்ளது. இதனால் பூ வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

**விளைச்சல் குறைவால் தஞ்சையில் மாம்பழம் விலை உயர்வு**

**தஞ்சை**, : முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தை விரும்பி சாப்பிடாதவர்கள் யாரும் இருக்க முடியாது. தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று போன்றப்படும் தஞ்சையில் மாம் பழம் விற்பனைக்கு எப்போ தும் குறைவிருக்காது.

கோடையில் சுற்றுலா பயணிகள் தஞ் சைக்கு படையெடுப்பார் கள். அவர்கள் தஞ்சையில் விற்பனை செய்யப்படும் மாம்பழங்களை வாங்கிச் செல்வது வழக்கம். இதே போல் தஞ்சை நகர வாசி களும் மாம்பழங்களை ஏராளமான வாங்கி செல்வார்கள். தஞ்சைக்கு பங்கனப்பள்ளி, இமாம்பசந்த், நீலம், ஒட்டு, செந்தூரான் என்று பல ரக மாம்பழங்கள் ஆண்டுதோறும் விற்பனைக்கு வரும். ஆனால் இந்த ஆண்டு மாம்பழங்களின் வரத்து மிகவும் குறைந்துள்ளது. இதனால் மாம்பழ பிரியர்கள் மற்றும் தஞ்சைக்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதற்கு காரணம் தஞ்சைக்கு எப்போதும் மாம்பழங்கள் குஜராத், கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் ஊட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் இருந்து வரும். இந்த ஆண்டு மழை குறைவு, ஆனால் வெயிலின் தாக்கம் அதிகம். எனவே பிஞ்சிலேயே வெம்பி கீழே விழுந்து விடுவதால் காய்ப்பு திறன் குறைவாக காணப்படுகிறது. இதன் காரணமாகவே

மாம்பழங்களின் வரத்து குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மாம்பழ சீசன் துவக்கித்திலேயே தினமும் தஞ்சைக்கு 10 டன் முதல் 25 டன் வரை மாம்பழங்கள் விற்பனைக்கு வரும். ஆனால் இப்போது 2 டன்னுக்கும் குறைவான மாம்பழங்கள் மட்டுமே வந்துள்ளது. வரத்து குறைவால் மாம்பழங்களின் விலை அதிகமாக உள்ளது என்று வியாபாரிகள் கூறினர்.

**காரைக்கால் முகத்துவார பகுதியில் மீன்பிடி தடைக்காலம் முடியும்முன் தூர்வாரும் பணி தொடங்கும்மீன்வளத்துறை செயலர் தகவல்**

**காரைக்கால்,**: மீன்பிடி தடைக்காலம் முடியும்முன், காரைக்கால் முகத்துவாரம் பகுதியில் தூர்வாரும் பணி தொடங்கும். என, புதுச்சேரி மீன்வளத்துறை செயலர் சுந்தரவடிவேலு தெரிவித்துள்ளார்.

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் தமிழகத்தைச் சேர்ந்த அதிகமான படகுகள், மாவட்ட மீன்வளத்துறை அனுமதி இன்றி நிறுத்தப்படுவதாகவும், ஒரு சில படகுகள் ஒரே பதிவு எண்ணில் செயல்படுவதாகவும், மீன்பிடி துறைமுகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் அனுமதி இன்றி ஒரு கிராமம் மீனவர்கள் மற்றும் பொதுமக்களிடம் வசூல் செய்வதாகவும், மாவட்ட மீன்வளத்துறை முறையாக செயல்படாதால் பல கிராம மீனவர்கள் அவதிக்குள்ளாவதாகவும் சமீப காலமாக குற்றசாட்டுகள் எழுந்து வருகிறது. இதையடுத்து மாநில மீன்வளத்துறை செயலர் சுந்தரவடிவேலு, நேற்று காரைக்கால் வந்து, மாவட்ட மீன்வளத்துறையின் செயல்பாடுகள் மற்றும் மீன்பிடி துறைமுகத்தை ஆய்வு செய்தார். தொடர்ந்து, மாவட்ட மீனவ கிராம பஞ்சாயத்தார்களுடன் கலந்துரையால் நடத்தினார். அப்போது மீனவர்கள் கூறியதாவது: காரைக்கால் அரசலாறு மற்றும் முகத்துவாரம் பகுதி அதிகமாக மணல் திட்டுகளால் படகு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி தூர்வாரி பல ஆண்டுகள் ஆவதால் முகத்துவாரம் பகுதி உடனே தூர்வார வேண்டும். மீன்பிடி துறைமுகத்தில் கட்டப்பட்டு செயல்பாட்டுக்கு வராத கட்டிடங்களை மீனவர்கள் செயல்பாட்டிற்கு திறந்து விடவேண்டும். கேன்டீன், டீசல் விற்பனை, படகுகளுக்காக பல்பொருள் அங்காடி விற்பனையை துவங்க வேண்டும். தமிழக படகுகளின் வரத்தால் துறைமுகத்தில் படகு நிறுத்த இடப் பற்றாக்குறை உள்ளது. எனவே படகுகளை கட்ட இடம் விரிவாக்க செய்ய வேண்டும். மீனவர்கள் மற்றும் பொதுமக்களிடம் நடத்தப்படும்

ஒரு கிராம வசூலை உடனே தடை செய்யவேண்டும் என வலியுறுத்தினர். பின்னர், செயலர் சுந்தரவடிவேலு கூறியதாவது:- காரைக்கால் மீனவர்கள் நலன் கருதி முகத்துவாரம் பகுதி தூர்வார ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது மீன்பிடி தடைக்காலம் அமலில் இருப்பதால், தூர்வாரும் பணி மிக விரைவில் துவங்கும். மீன்பிடி துறைமுகம் உள்ளேயுள்ள டீசல் பங்க் விரைவில் செயல்பாட்டிற்கு வரும். தினசரி 150 லிட்டர் டீசல் மானிய விலையில் தரப்படுகிறது. இதனை அதிகரிக்கவேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். மானியம் அல்லாத டீசல் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.

---

### உரிய காலத்தில் விவசாய கடன்களை செலுத்தினால் வட்டியை திருப்பி வழங்க வேண்டும்ரிசர்வ் வங்கி அறிவுறுத்தல்

**மயிலாடுதுறை** : புங்கனூர் நுகர்வோர் பாதுகாப்புக் கழக சட்ட ஆலோசகர் விஜயகுமார், தமிழக அரசு மற்றும் மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியவற்றிற்கு கடந்த 2013ம் ஆண்டு ஒரு கோரிக்கை மனு அனுப்பினார்.அதில் விவசாயிகள் விவசாயத்திற்காக கூட்டுறவு வங்கிகளில் நகையை அடகு வைத்து நகைக்கடன் வாங்குகின்றனர்.

அந்த கடனை 8 மாதத்திற்குள் திருப்பிச் செலுத்தினால் அவர்களுக் குண்டான வட்டியை வங்கி கள் வசூலிப்பது இல்லை. தமிழக அரசு இதனை நடைமுறைப்படுத்தி வருகிறது. 8 மாதத்திற்கு மேல் கடந்தால் 7% வட்டியுடன் வசூல் செய்து வருகிறது தமிழக அரசு.

அதேபோல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயத்திற்காக வாங்கும் நகைக்கடனை உரிய காலத்தில் செலுத்தும்போது அசலுடன் 7% வட்டி வசூல் செய்கின்றனர். ஓராண்டு கழித்து 3% வட்டியை விவசாயிகளுக்கு அந்த தொகை திருப்பி வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் ஒருசில சமயங்களில் வட்டி கிடைக்காத நிலையும் உள்ளது என்று விவசாயிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். ஒருசில தேசியமயமாகப்பட்ட வங்கிகளில் ஓர்ஆண்டிற்கும் மேலாகியும் இந்த வட்டி திருப்பி வழங்கப்படவில்லை.எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என

அதில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு ரிசர்வ் வங்கியின் சென்னை கிராமதிட்டம் மற்றும் கடன்துறையின் மத்திய அலுவலகத்திலிருந்து அதன் பொதுமேலாளர் அளித்துள்ள பதில் அனுப்பியுள்ளார் .

அதில் 2013ம் ஆண்டு டிசம்பர் 4ஆம் தேதி அன்றைய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கை நாட்டின் அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் வணிக வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

அந்த சுற்றறிக்கை ஆர்பிஐ 201314/398ன்படி விவசாய கடனாக ரூ.3 லட்சம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிரைவேட் செக்டார் ஷெட்யூல் வணிக வங்கிகள் ஒரு நபருக்கு விவசாய கடனாக ரூ.3 லட்சம்வரை 7% வட்டிக்கு வழங்கவேண்டும். விவசாயிகள் உரிய காலம் அல்லது ஒரு வருடத்திற்குள் அந்தக்கடனை திருப்பி செலுத்திவிட்டால். அவர்களுக்கு 3% வட்டியை திருப்பி வழங்க வேண்டும்.

விவசாயிகள் எந்தெந்த வகையான திட்டங்களுக்கு விவசாய கடனாக வாங்க லாம் என்ற சுற்றறிக்கையில் தெளிவாக கூறியிருக்கிறது அதன்படி 6 வகையாக விவசாயக்கடன் பெறலாம்.

குறுகிய கால விவசாயக்கடன், அறுவடைக்குப் பிறகு செய்யப்படும் செலவு, விவசாய பொருட்களை மார்கெட்டிங் செய்வதற்கான கடன், விவசாயிகள் வீட்டிற்குத் தேவையான வீட்டு உபயோகப்பொருட்கள், விவசாயம், பால்பண்ணை மற்றும் மீன் பண்ணை ஆகியவற்றினை பராமரிப்பதற்கான தொகை, விவசாயத்திற்குத் தேவையான பம்ப்செட், ஸ்பிரேயர், பால்கறவைக்கான மாடு போன்றவற்றினை வாங்குவதற்கும் விவசாய கடன் பெறலாம் என்று அதில் தெரிவித்துள்ளது.

இந்த கடன் திட்டம் குறித்து (<ஷ்ஷ்ஷ்.ச்ஷீதீவீ.ஷீச்ஷீரீ.வீஸீ>) இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஒவ்வொரு வங்கியிலும் இதன் காப்பி இருக்கிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வங்கிகள் ஒவ்வொரு 6 மாததித்திற்கு ஒருமுறை விவசாயிகள் உரிய காலத்தில் செலுத்திய விவசாயக்கடன் குறித்து 3% வட்டியினை பெற்று அவர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

**சீலா மீன் கிலோ ரூ.900 ஆனது நடுத்தர மக்களுக்கு எட்டாக்கனியான மீன் விலை உயர்வு ஒருமாதத்திற்கு நீடிக்கும்**

**நெல்லை**, : தமிழகத் தில் கடலில் மீன்கள் இனப்பெருக்க காலம் துவங்கியுள்ளதால் விசைப்படகுகளில் சென்று மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீன் சந்தைகளுக்கு முக்கிய மீன் களின் வருகை குறைந்துள் ளது. இதனால் மீன்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை பலரும் விரும்பி சுவைக்கும் சீலா ரக மீன்கள் முன்பு கிலோ ரூ.500 க்கு விற்கப்பட்டது தற்போது ரூ.800 மற்றும் ரூ.900 என விலை உயர்ந்துள்ளது. இதுபோல் ரூ.400க்கு விற்கப்பட்ட சீலா ரக சிறிய மீன்கள் தற் போது ரூ.800க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது போல் விலாமீன் கிலோ ரூ.380க்கும் மஞ்சள்பாறை கிலோ ரூ.340க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த ரக மீன்கள் தலா ரூ.100 வரை விலை உயர்ந்துள்ளது. மீன்கள் விலை உயர்ந்த போதிலும் அதை மீன் உணவு பிரியர்கள் தாராளமாக வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து நெல்லை யை சேர்ந்த மீன் வியாபாரி கள் கூறுகையில், கேர ளாவில் இருந்து கொள்முதல் செய்யப்படும் மீன்கள், சமீப கால மாக அதிக அளவில் விற்பனையாகுவதில்லை. கேரளா மீன்கள் அதிக வாடை இருப்பதால் அவற்றை வாங்க வாடிக்கையாளர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். தூத்துக்குடி, ராமேஸ்வரம், திருச்செந்தூர் பகுதிகளில் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போது மீன்பிடி தடை காலம் அமலில் இருப்பதால் சீலா போன்ற மீன்கள் வரத்து குறைந்துள்ளன. இதனால் மீன்கள் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு ஒருமாதம் வரை நீடிக்க வாய்ப்பு உள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

**தென்காசி பகுதியில் பலத்த மழை**

**தென்காசி**, : தென்காசி பகுதியில் நேற்று மாலை திடீரென பலத்த காற்று, இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. குற்றாலத்தில் மரம் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தென்காசி, குற்றாலம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மாலை வேளைகளில் அவ்வப் போது மழை பெய்து வருகிறது. நேற்று மாலையில் திடீரென வானில் கரு

மேகம் சூழ்ந்தது. தொடர்ந்து பலத்த காற்று, இடி மின்னலுடன் சுமார் 1 மணி நேரம் நல்ல மழை பெய்தது.

இதனால் சாலை களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. ஆனைப்பாலம் அருகே தேங்கிய மழை நீரால் வாகனங்கள் ஊர்ந்து சென்றன.

குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி அருகே குற்றாலநாதர் கோயிலுக்கு சொந்த மான நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த இலுப்பை மரம் முறிந்து விழுந்ததால் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட் டது.

இதனால் வாகனங்கள் அனைத்தும் ராமாலயம் வழியாக மாற்றுப்பாதையில் திருப்பிவிடப்பட்டன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பரமத்தி வேலூர் ஏல மார்க்கெட்டில் வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



பரமத்தி வேலூர்,

பரமத்தி வேலூர் தினசரி ஏல மார்க்கெட்டில் வாழைத்தார்கள் விலை உயர்ந்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**<u>வாழை பயிரீடு</u>**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் பரமத்தி வேலூர், பாண்ட மங்கலம், குப்புச்சிபாளையம், ஓலப்பாளையம், எல்லைமேடு, நன்செய் இடையார், பொத் தனூர், அணிச்சம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வாழைத் தார்கள் சேலம், திண்டுக்கல், கோவை, ஊட்டி, மதுரை, பழனி, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங் களுக்கும் தினந்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் பரமத்தி வேலூரில் உள்ள மார்க்கெட்டிலும் வாழைத்தார் ஏலம் விடப்பட்டு வருகிறது.

**<u>விலை உயர்வு</u>**

சென்ற வாரம் இந்த மார்க்கெட்டில் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.200–க்கும், கற்பூர வள்ளி ரூ.150–க்கும், ரஸ்தாலி ரூ.200–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.200–க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.4 வீதம் ஏலம் போனது.

நேற்று நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.330–க்கும், கற்பூரவள்ளி ரூ.250–க்கும், ரஸ்தாலி ரூ.300–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.300–க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6 வீதம் ஏலம் போனது.

**<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

சென்ற வாரத்தை காட்டி லும் இந்த வாரம் வாழைத்தார் விலை உயர்ந்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வரத்து குறைவு, உள்ளூர் கோவில் பண்டிகைகள், அமாவாசை உள்ளிட்ட காரணங்களால் கோவில்களில் சிறப்பு பூஜை கள் நடைபெற்று வருகிறது.

இதன் காரணமாக விலை உயர்ந்து உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**சீசன் தொடங்கியது: செந்தூரா, மல்கோவா மாம்பழ விற்பனை படுஜோர்**



தர்மபுரி,

தர்மபுரி மாவட்டத்தில் சீசன் தொடங்கியதை யொட்டி செந்தூரா, மல் கோவா மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள் ளது.

<u>மாம்பழ சீசன்</u>

முக்கனிகளில் முதன்மை யாக விளங்கும் 'மா' அனை வரும் விரும்பி சாப்பிடும் பழமாகும். வருடத்தில் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் மட்டுமே விற்பனை செய்யப் படும். மாம்பழங்களுக்கு என்றைக்கும் கிராக்கிதான். தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ் ணகிரி மாவட்டத்தில் அதிகம் விளைச்சலாகும் மாம்பழங்கள் உள்ளூர் சந்தை முதல் வெளி நாட்டு சந்தை வரை விற்பனை செய்யப்படுகிறது.இந்த ஆண்டு போதுமான மழை இல்லாததால் மா விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகள் கலக்கம் அடைந் துள்ளனர். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு மழை அளவு குறைந்து விட் டது. பெரும்பாலான தோட் டங்களில் மா பிஞ்சுகள் உதிர்ந்து விட்டது. இதனால் மா விளைச்சல் குறைந்து அதன் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு கூடுதல் விலை க்கு விற்பனை செய்யப்படு கிறது.

<u>விற்பனை படுஜோர்</u>

மா விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் மாம்பழங்கள் காரிமங்கலம், பாலக்கோடு, தர்மபுரி உள் ளிட்ட பல்வேறு சந்தைகளுக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த மாம்பழங்களை வியாபாரிகள் வாங்கி கடைகள் மற்றும் தள்ளு வண்டிகளில் வைத்து விற் பனை செய்து வருகிறார் கள். சீசன் தொடக்கம் என்பதால் தற்போது செந்தூரா, மல்கோவா ரக மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளது. செந்தூரா மாம்பழங்கள் கிலோ ரூ.40 முதல் 50 வரை யிலும்,

மல்கோவா மாம்பழங் கள் கிலோ ரூ.80 முதல் 120 வரையிலும் விற்பனை செய் யப்படுகிறது. தர்மபுரி பஸ் நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பழக்கடைகள், தள்ளுவண்டி களில் மாம்பழங்கள் விற்பனை படுஜோராாக நடைபெற்று வருகிறது. தர்மபுரி, கிருஷ்ண கிரி தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் ஆங்காங்கே வியா பாரிகள் மாம்பழ விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். வெளியூர் செல்லும் பொதுமக்கள் ஆர்வத் துடன் மாம்பழங்களை வாங்கி செல்கின்றனர். விலை கூடுதலாக இருந்தாலும் ஆசைக்காக மாம்பழங்கள் வாங்குவதை பொதுமக்கள் யாரும் தவறுவதில்லை.

## பப்பாளி- வெண்டைக்காய் விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி



பி.பி.அக்ரஹாரம் அருகே சமயசங்கிலியில் உள்ள

ஈரோடு,

ஈரோடு பகுதியில் பப்பாளி மற்றும் வெண்டைக்காய் விளைச்சல் அதிகரித்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**காய்கறி நடவு**

ஈரோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சில விவசாயிகள் காய்கறிகள் பயிர் செய்து உள்ளனர். பி.பி.அக்ரஹாரத்தை அடுத்து உள்ள சமயசங்கிலி பகுதியில் விவசாயிகள் வெண்டைக்காய் பயிர் செய்து உள்ளனர்.

40 நாட்களில் காய் காய்க்கும் தன்மை கொண்ட இந்த வெண்டைக்காய்கள் தற்போது விளைச்சலை தொடங்கி உள்ளன.

இதுபற்றி விவசாயி கலாமணி என்பவர் கூறியதாவது:-

**வெண்டைக்காய்**

எங்கள் பகுதியில் சுமார் 4 ஏக்கர் அளவுக்கு விவசாயிகள் வெண்டைக்காய் சாகுபடி செய்து உள்ளனர். வெண்டைக்காய் காய்த்து அறுவடை தொடங்கி விட்டால் சுமார் 50 நாட்கள் வரை காய்கள் இருக்கும். தற்போது எங்கள் பகுதியில் கிணற்று நீர் பாசனத்தில் விவசாயம் செய்து வருகிறோம்.

இருப்பினும் கடந்த முறையை விட வெண்டைக்காய் விளைச்சல் அதிகரித்து இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதுபோல் கடந்தவாரத்தை விட இந்த வாரம் விலையும் சற்று உயர்ந்து உள்ளது. ½ ஏக்கர் நடவு செய்தால் தினமும் சுமார் 200 கிலோ வெண்டைக்காய் அறுவடை செய்யலாம். நாங்கள் ஈரோடு சந்தையில் இதை விற்பனை செய்து வருகிறோம்.

இவ்வாறு விவசாயி கலாமணி கூறினார்.

**பப்பாளி**

இதுபோல் இதே பகுதியில் பப்பாளி விளைச்சலும் அமோகமாக உள்ளது. குட்டை ரக பப்பாளிகள் குறைந்த நாட்களிலே விளைச்சலை கொடுப்பதாலும், பழங்கள் சுவையாக இருப்பதாலும் விவசாயிகள் தற்போது அதிக அளவில் பப்பாளி சாகுபடி செய்து வருகிறார்கள்.

**பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.85 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



பெருந்துறை,

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.85 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

**கொப்பரை தேங்காய் ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் நேற்று நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் இருந்து விவசாயிகள் 1,657 மூட்டைகளில் 80 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர்.

இதில் முதல் தர கொப்பரை தேங்காய் ஒரு கிலோ 104 ரூபாய் 50 காசு முதல் 107 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. 2-ம் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ 73 ரூபாய் 85 காசு முதல் 103 ரூபாய் 50 காசு வரை ஏலம் போனது.

கடந்த புதன்கிழமை நடந்த ஏலத்தை விட கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 2 ரூபாய் குறைந்தது. மொத்தம் ரூ.85 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

**தேங்காய்**

இதேபோல் பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. மொத்தம் 1 லட்சம் தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 14 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையும், 2-ம் தரம் தேங்காய் ஒன்று 12 ரூபாய் முதல் 13 ரூபாய் வரையும், 3-ம் தரம் தேங்காய் ஒன்று 10 ரூபாய் முதல் 11 ரூபாய் வரையும் என மொத்தம் ரூ.13 லட்சத்துக்கு விற்பனையானது.

பரங்கிக்காய் 2 டன் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இது ஒரு கிலோ 3 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சேனைக்கிழங்கு 1 டன் கொண்டு வரப்பட்டு இருந்தன.

இது ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விற்பனையானது.

**குண்டடம் சந்தையில் ஆடு, மாடு விற்பனை விறுவிறுப்பு**



குண்டடம் சந்தைக்கு கொண்டு வரப்பட்ட மாடுகளை படத்தில் காணலாம்.

குண்டடம்,

பாராளுமன்ற தேர்தல் முடிந்ததால் குண்டடம் சந்தைக்கு அதிக அளவில் வியாபாரிகள் வந்தனர். இதனால் செம்மறியாடுகள், மற்றும் மாடுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது.

**குண்டடம் சந்தை**

தாராபுரம் அருகே குண்டடத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை வாரச்சந்தை கூடுகிறது. இந்த சந்தைக்கு ஊதியூர், சூரியநல்லூர், தாயம்பாளையம், எரகாம்பட்டி, உப்பாறு அணை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து செம்மறியாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

இந்த ஆடுகளை மேச்சேரி, மதுரை, திண்டுக்கல், பொள்ளாச்சி, கோவை, திருப்பூர், உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து வாங்கி செல்கிறார்கள்.பாராளுமன்ற தேர்தல் காரணமாக குண்டடம் சந்தையில் ஆடு மாடு வியாபாரம் மந்த நிலையில் இருந்தது.

**வியாபாரிகள் அவதி**

வியாபாரிகள் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு வர முடியாத காரணத்தினால் ஆடுகளை மொத்தமாக வியாபாரிகளால் வாங்க முடியாத நிலை இருந்தது. இதனால் சந்தைக்கு ஆடுகள் வரத்து குறைந்து விற்பனையும் எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை.

மேலும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட ஆடுகள் விற்பனையாகாமல் திரும்பி கொண்டு சென்றனர். இதனால் வியாபாரிகள், ஆடு வளர்க்கும் விவசாயிகள் பெரிதும் அவதிக்குள்ளாயினர்.

### விற்பனை விறுவிறுப்பு

இந்த நிலையில் தேர்தல் முடிந்து விட்ட நிலையில் நேற்று குண்டடம் ஆட்டுச்சந்தை கூடியது. சந்தைக்கு 3 ஆயிரம் ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. மேலும் வியாபாரிகள் அதிக எண்ணிக்கையில் வந்து இருந்ததால் அனைத்து ஆடுகளும் விற்பனையானதுடன் மொத்த வியாபாரிகளுக்கு ஆடுகள் கிடைக்கவில்லை.

கடந்த வாரங்களில் ரூ.3 ஆயிரத்து 800 வரை விற்பனையான 10 கிலோ கொண்ட ஆடுகள் இவ்வாரம் ரூ.4 ஆயிரத்து 500 வரை விற்பனையானது. இதபோலவே மாட்டுச்சந்தையிலும் அதிகளவில் மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டதுடன் மாடுகள் விலையும் அதிகரித்து இருந்தது.

### தஞ்சைக்கு மாம்பழங்கள் வரத்து அடியோடு குறைந்தது உற்பத்தி இல்லாததால் விலையும் அதிகரிப்பு



தஞ்சைக்கு மாம்பழங்கள் வரத்து அடியோடு குறைந்துள்ளது. இந்த ஆண்டு உற்பத்தி இல்லாதால் விலையும் அதிகரித்து காணப்படுகிறது.

<u>மாம்பழம்</u>

முக்கனிகளில் முதல்கனி மாங்கனி. மேலும் பழங்கனின் அரசன் மாம்பழம் என்றும் கூறுவார்கள். கோடைகாலம் வந்து விட்டாலே மாம்பழ சீசனும் தொடங்கி விடும். மாம்பழத்தை அப்படியே சாப்பிடலாம். இது தவிர ஜூஸ் போட்டும் சாப்பிடலாம். மலிவாக கிடைக்கும் பழங்களில் மாம்பழம் ஒன்றாக இருந்தது.

ஆனால் இந்த ஆண்டு அது சாத்தியம் இல்லாத நிலை காணப்படுகிறது. காரணம் மாம்பழங்களின் உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. இந்தியாவில்

உத்திரபிரதேசம், குஜராத், ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தான் மாம்பழங்கள் விளைகின்றன. அதில் தமிழ்நாட்டில் விளையும் மாம்பழங்களுக்கு தனிச்சுவை உண்டு. இங்கு விளையும் மாம்பழங்களுக்கு தான் இனிப்பு சுவையும் அதிகமாக இருக்கும்.

<u>உற்பத்தி குறைவு</u>

மாம்பழங்களில் மட்டும் 1000 வகை உண்டு என்பார்கள். இதில் மல்கோவா, அல்போன்சா, நீலம், இமாம்பசந்த், பங்கனாப்பள்ளி, செந்தூரம் போன்ற மாம்பழங்கள் தமிழகத்தில் அதிகம் விளைகின்றன. தமிழகத்தில் சேலம், திண்டுக்கல், வாணியம்பாடி, நத்தம், திருச்சி ஸ்ரீரங்கம் உள்பட பல்வேறு பகுதிளில் மாம்பழங்கள் விளைகின்றன.


இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் மாம்பழங்கள் உற்பத்தி குறைந்துள்ளன. குறிப்பாக மாசி, பங்குனி மாதங்களில் மழை பெய்யும். இந்த மழை மாம்பழத்திற்கு ஏற்றது. பூ பூத்து காய்த்துள்ள நிலையில் இந்த மழை பெய்யும் போது பிஞ்சுகள் உதிராமல் நல்ல விளைச்சல் ஏற்படும். ஆனால் இந்த ஆண்டு மழை பெய்யாததால் பிஞ்சுள் உதிர்த்து மாம்பழங்கள் உற்பத்தி குறைவாக காணப்படுகின்றன.

<u>வரத்து இல்லை</u>

இதனால் தஞ்சைக்கு இந்த ஆண்டு மாம்பழங்கள் வரத்து அடியோடு குறைந்துள்ளது. தற்போது பங்கனாப்பள்ளி வகை மாம்பழங்கள் மட்டுமே விற்பனைக்கு வந்துள்ளன. அதுவும் கிலோ ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தஞ்சை மக்களுக்கு மாம்பழம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

இது குறித்து மொத்த வியாபாரி ஒருவர் கூறுகையில், ‘‘இந்த ஆண்டு மாம்பழங்கள் உற்பத்தி வெகுவாக குறைந்துகாணப்படுகிறது. வழக்கமாக இந்த காலக்கட்டங்களில் தஞ்சைக்கு தினமும் 10 முதல் 25 டன் வரை மாம்பழங்கள் விற்பனைக்கு வரவழைக்கப்படும். மே, ஜூன் மாதங்களில் மாம்பழங்கள் 100 டன் வரை வரவழைக்கப்பட்டு பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆனால் தற்போது தினமும் 1 டன் மாம்பழங்கள் வருவது என்பது கூட அரிது தான். இன்னும் ஓரிரு நாட்களில் மழை பெய்தால் மாம்பழங்கள் உற்பத்தி சற்று அதிகரிக்கும்’’என்றார்.

**சென்னைக்கு குடிநீர் அனுப்பும் பணிக்காக வீராணம் ஏரிக்கு வடவாறு வழியாக 500 கன அடி நீர்வரத்து**



காட்டுமன்னார்கோவில்,

சென்னைக்கு வீராணம் ஏரியில் இருந்து குடிநீர் அனுப்பும் பணிக்காக வடவாறு வழியாக வினாடிக்கு 1200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

<u>வீராணம் ஏரி</u>

காட்டுமன்னார்கோவில் அருகே லால்பேட்டையில் உள்ளது வீராணம் ஏரி. இந்த ஏரி கடலூர் மாவட்டத்தில் மிகப்பெரிய நீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. இந்த ஏரிக்கு சாதாரண காலங்களில் கீழணையிலிருந்து வடவாறு வழியாகவும், மழைக்காலங்களில் வீராணம் ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான செங்கால் ஓடை, கருவாட்டு ஓடை, வெண்ணங்குழி ஓடை வழியாக மழைநீர் வரும்.

மேலும், இந்த ஏரியிலிருந்து சென்னை நகர மக்களின் குடிநீர் தேவைக்காக நாள்தோறும் வினாடிக்கு 77 கன அடி தண்ணீர் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் மூலம் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் டெல்டா பகுதிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 1 லட்சம் ஏக்கர் விவசாய விளைநிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

இந்நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மேட்டூரில் இருந்து கடந்த ஜனவரி மாதம் திறந்து விடப்பட்ட தண்ணீர் கல்லணை, கீழணை வழியாக வீராணம் ஏரிக்கு வந்ததால் வறண்டு கிடந்த ஏரியின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 46.50 அடி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டது.

<u>சென்னைக்கு குடிநீர் அனுப்பும் பணி</u>

தற்போது, கோடை வெயிலின் காரணமாகவும், சென்னைக்கு நாள்தோறும் வினாடிக்கு 77 கனஅடி தண்ணீர் அனுப்பி வைக்கப்படுவதாலும் ஏரியின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து கொண்டே இருந்தது. கடந்த 24–ந் தேதி ஏரியின் நீர்மட்டம் 42.30 அடியாக குறைந்தது. இதனால், வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு 10 நாட்களுக்கு மட்டும் குடிநீர் அனுப்ப முடியும் என்ற சூழ்நிலை உருவாகியது.

இந்நிலையில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு மேட்டூர் அணையிலிருந்து கல்லணை வழியாக கீழணைக்கு வினாடிக்கு 5 ஆயிரத்து 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டதை தொடர்ந்து, கீழணை 5.20 அடியை எட்டியது.

தொடர்ந்து, கல்லணையில் இருந்து வடவாறு வழியாக 1,200 கனஅடி தண்ணீர் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு உருத்திரசோலை மதகு வழியாக வீராணம் ஏரிக்கு வந்தது. நேற்றைய நிலவரப்படி, ஏரிக்கு உருத்திரசோலை மதகு வழியாக வினாடிக்கு 500 கனஅடி நீர் மட்டும் வருகிறது. சென்னைக்கு வினாடிக்கு 77 கன அடிநீர் அனுப்பி வைக்கப்படுகிறது.

**பண்ருட்டி பகுதியில் கடும் வெயிலால் முந்திரி விளைச்சல் பாதிப்பு**



பண்ருட்டி,

கடும் வெயிலின் தாக்கத்தினால் பண்ருட்டி பகுதியில் முந்திரி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**முந்திரி சாகுபடி**

பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள காடாம்புலியூர், முத்தாண்டிக்குப்பம், காட்டாண்டிக்குப்பம், மேல்மாம்பட்டு, கீழிருப்பு, மேலிருப்பு, சாத்திப்பட்டு உள்பட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முந்திரி சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தானே புயலில் ஏராளமான முந்திரி மரங்கள் வேரோடு சாய்ந்தன. மேலும் பல மரங்களின் கிளைகள் உடைந்து சேதமானது. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து, மாவட்ட நிர்வாகத்தின் பல்வேறு முயற்சிகளின் பெயரில் புதிய முந்திரி கன்றுகள் நடவும், எஞ்சிய மரங்களை காப்பாற்றவும் நடவடிக்கை மேற்கொண்டனர். புயலில் வேரோடு சாய்ந்த மரங்களை தவிர்த்து, கிளைகள் மட்டும் விழுந்த மரங்கள் சில நாட்களில் துளிர்விட்டு வளர தொடங்கியது. இந்த மரங்களை விவசாயிகள் கண்ணும், கருத்துமாக பராமரித்து வந்தனர். இதன் விளைவாக கடந்த ஆண்டு ஒரளவுக்கு முந்திரி விளைச்சல் கிடைத்தது. இது முந்திரி விவசாயிகளுக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

**விளைச்சல் பாதிப்பு**

தொடர்ந்து, நடப்பு ஆண்டில் முந்திரி மரங்களை விவசாயிகள் தீவிரமாக பராமரித்து வந்தனர். இந்நிலையில், கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் முந்திரி மரங்களில் பூக்கள் பூக்க தொடங்கியது. இதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். தொடர்ந்து முந்திரி காய்கள் காய்க்கத் தொடங்கின.

இந்நிலையில், தற்போது வாட்டி வதைத்து வரும் வெயிலால் முந்திரி மரத்தில் பூக்களும், காய்களும் கருகி வருகிறது. இதனால் முந்திரி விளைச்சல் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இதுகுறித்து சாத்திப்பட்டு கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், தானே புயல் பாதிப்பில் இருந்து முந்திரி விவசாயிகள் ஆகிய நாங்கள் மெல்ல, மெல்ல மீண்டும் வந்து கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு முந்திரி விளைச்சல் அமோகமாக இருக்கும் என்று நினைத்திருந்தோம். ஆனால், கடுமையான வெயிலின் தாக்கத்தால் முந்திரி

மரத்தில் உள்ள பூக்கள் காய்ந்து, கருகியதால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏக்கருக்கு 8 மூட்டை முந்திரி கிடைத்தது. ஆனால், கடுமையான வெயிலின் தாக்கத்தால் தற்போது ஏக்கருக்கு 4 மூட்டைகள் முந்திரி தான் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. என்றார்.

**மணமேல்குடி, கட்டுமாவடி சந்தைகளில் மீன்கள் விலை கிடுகிடு உயர்வு**



மணமேல்குடி,

மீன்கள் வரத்து குறைவால் மணமேல்குடி, கட்டுமாவடியில் உள்ள மீன் சந்தைகளில் மீன் களின் விலை கிடுகிடு வென உயர்ந்து ள்ளது. அங்கு ஒரு கிலோ சீலா மீன் ரூ.300–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

<u>மீன்வரத்து குறைவு</u>

புதுக்கோட்டை மாவட் டத்தில் கட்டுமாவடி, மணமேல்குடி ஆகிய பகுதிகளில் பெரிய மீன் சந்தைகள் உள்ளன. இந்த மீன் சந்தைக்கு தூத்துக்குடி, ராமநாதபுரம், தொண்டி, மல்லிகைப்பட்டிணம், அதிராம்பட்டிணம் ஆகிய கடற்கரை பகுதியில் பிடிக்கப் படும் மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த மீன்களை வாங்குவதற்கு புதுக்கோட்டை, காரைக்குடி, திருச்சி, தஞ்சாவூர், பட்டுக் கோட்டை ஆகிய இடங்களில் இருந்தும் மற்றும் உள்ளூர் வியாபாரிகளும் வருகின்ற னர்.

தற்போது 45 நாட்கள் மீன்பிடி தடைகாலம் அமலில் உள்ளதால் விசைப் படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. தற்போது நாட்டுப்படகு மூல மாக பிடிக்கப்படும் மீன்கள் மட்டுமே விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாட்டுப்படகின் மூலமாக மிதவை வலை வைத்து மட்டுமே மீன்பிடிக்க முடி யும்.

காற்றின் சீதோசன நிலையை பொறுத்துதான் மீன் கிடைக்கும். இதனால் மணமேல்குடி, கட்டுமாவடி மீன் சந்தைகளுக்கு மீன்வரத்து குறைந்துள்ளது.

<u>விலை உயர்வு</u>

மீன்கள் வரத்து குறைவின் காரணமாக விலை அதிகமாக உயர்ந்துள்ளது. தற்போது ஒரு கிலோ மொரல் மீன் ரூ.300 முதல் 400 வரையும், ரூ.200–க்கு விற்ற ஒரு கிலோ சீலா மீன் தற்போது ரூ.300 வரையும், ஒரு கிலோ ரூ.250–க்கு விற்கப்பட்ட செங்கனி மீன் தற்போது ரூ.350 வரையும் விற்பனையாகிறது. இதேபோல் நண்டு, இறால் போன்றவையும் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.இந்த விலை ஏற்றத்தால் வெளியூர் வியாபாரிகள் அதிக மாக வருவது கிடையாது. உள்ளூர் வியாபாரிகள் குறைந்த அளவே மீன்களை வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து மீன் வாங்க வந்த வள்ளி என்ற பெண் கூறுகையில், எங்கள் குடும் பத்தில் 5 பேர் இருக்கி றோம். அனைவரும் மீன் உணவை தான் விரும்பி சாப்பிடு வார்கள். அடிக்கடி மீன் வாங்க கட்டுமாவடி மீன் மார்க்கெட்டிற்கு வரு வேன். முன்பு 200 ரூபாய்க்கு மீன் வாங்கினாலே நிறைய மீன் இருக்கும். என் குடும் பத்தினருக்கு போது மானதாக இருக்கும்.

ஆனால் இப்போதெல்லாம் 400 ரூபாய்க்கு மீன் வாங்க வேண் டிய நிலை உள்ளது. இதனால் மீன் மார்க்கெட்டிற்கு வந்து விலையை பார்த்தால் மீன் வாங்க முடியாத அளவு க்கு விலை யேற்றமாக உள் ளது. இதனால் ஒரு கிலோ கோழிக்கறி வாங்கிச் செல்கி றேன், என்றார்.

<u>மீன் பிரியர்கள் ஏமாற்றம்</u>

கோடை விடுமுறை காலம் என்பதால், மீன், இறைச்சி போன்றவற்றை வாங்கி வாய்க்கு ருசியாக சாப்பிடவே பெரும்பாலான அசைவ பிரியர்கள் விரும்புவார்கள். ஆனால் தற்போது மீன்களின் விலை கிடு,கிடு வென உயர்ந்துள்ளதால், அவர்கள் மீன்களை வாங்கி சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் குறைந்த விலையில் விற்கும் கோழிக்கறியை உணவுக்காக வாங்கிச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மீன் பிரியர்கள் ஏமாற்றமடைந் துள்ளனர்.

**எலுமிச்சை பழங்கள் உற்பத்தி அதிகரிப்பு கட்டுப்படியான விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை**



கீரமங்கலம்,

கீரமங்கலம் பகுதியில் எலுமிச்சை பழங்கள் உற்பத்தி அதிகரித்து ள்ளது. இருந்தபோதும் உற்பத்தி செலவுக்கேற்ற கட்டுப் படியான விலை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலையுடன் கூறினர்.

**எலுமிச்சை பழம் உற்பத்தி அதிகரிப்பு**

புதுக்கோட்டை மாவட் டத்தில் கீரமங்கலம், செரியலூர், கொத்தமங்கலம், குளமங்கலம், சேந்தன்குடி, நகரம், பனங்குளம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் விவசாயிகள் அதிகமாக எலுமிச்சை உற்பத்தி செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக உற்பத்தி அதிக மாகி வருகிறது.

இப்பகுதியில் இருந்து ஒரு நாளைக்கு சுமார் 15 டன் வரை எலுமிச்சை பழம் மதுரை மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. மழை யின்மை, வறட்சி, மின்வெட்டு காரணங் களால் எலுமிச்சை உற்பத்தி செலவுகள் அதிகமாக உள் ளது. ஆனால் உற்பத்திக்கு ஏற்ற கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்று விவ சாயிகள் கவலையுடன் கூறு கின்றனர்.

**கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும்**

கீரமங்கலம் பகுதியில் உற்பத்தியாகும் எலுமிச்சை பழம் கீரமங்கலம், கொத்த மங்கலம், வடகாடு, புளிச் சங்காடு கைகாட்டி, பனங் குளம், குளமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள எலுமிச்சை பழக் கடை களிலும், காய்கனி கமிஷன் கடைகளிலும் எடை போட்டு வாங்கப்படுகிறது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ

எலுமிச்சை பழம் ரூ.10 முதல் 15 வரை விற்பனையானது. தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் சற்று விலை உயர்ந்து ஒரு கிலோ எலுமிச்சைப்பழம் ரூ.50 முதல் 60 வரை விற்கப்படுகிறது.

ஆனால் இங்கு குறைந்த விலைக்கு விற்பனையாகும் எலுமிச்சை பழம் மதுரை போன்ற நகரங்களில் ஒரு கிலோ ரூ.120 முதல் 150 வரை விற்கப்படுகிறது. இதனால் உற்பத்தி செலவுக்கு ஏற்றபடி கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அவரை செடிகளில் மஞ்சள் நோய் தாக்குதல்**



சின்னமனூர்,

சின்னமனூர் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள அவரை செடிகளில் மஞ்சள் நோய் தாக்கியதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**அவரை சாகுபடி**

தேனி மாவட்டம் சின்னமனூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான ஓடைப்பட்டி, சீப்பாலக்கோட்டை, அப்பிபட்டி, சின்னஓவுலாபுரம், எரசக்கநாயக்கனூர், மார்க்கையன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் அவரை சாகுபடி அதிக அளவில் செய்யப்பட்டுள்ளது. அவரை சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவு ஆகிறது.

இந்த நிலையில் அவரை செடிகளை மஞ்சள் நோய் தாக்கி வருகிறது. அவரை செடிகள் முழுவதும் மஞ்சள் நிறத்தில் மாற தொடங்கி உள்ளது. இதனால் அவரை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இந்த நோய்

தாக்குதல் காரணமாக பச்சை நிறத்தில் காணப்பட வேண்டிய காய்கள் வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கின்றன.

**பல ஆயிரம் ரூபாய் நஷ்டம்**

வெள்ளை நிறத்தில் காணப்படுவதால் அவரைக்காய் சந்தை மற்றும் மார்க்கெட் பகுதியில் விற்பனை ஆகவில்லை. ரூ.200 முதல் ரூ.600 வரை செலவு செய்து விதைகள் வாங்கி சாகுபடி செய்த நிலையில் நோய் தாக்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வாரம் ஒருமுறை 2 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து மருந்து அடித்து பாதுகாத்து வருகின்றனர்.

அவரைக்காய் வெள்ளை நிறத்தில் இருப்பதால் காய்களை பிரித்து மார்க்கெட்டுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இதனால் அவரைக்காயின் விலை ரூ.40 முதல் ரூ.60 வரை விற்பனையாகிறது. அவரை செடிகளில் நோய் தாக்கியதால் விவசாயிகள் செடிகளை மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தி வருகின்றனர். பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து பயிரிட்ட நிலையில் நோய் தாக்கியதால் விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

**தேவதானப்பட்டி பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் சரிவு கருகி வரும் பயிர்கள்**



தேவதானப்பட்டி,

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி அருகே உள்ள கெங்குவார்பட்டி, சில்வார் பட்டி, எருமலைநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளாக போது மான மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவி வருகிறது.

மஞ்சளாறு அணையில் தண்ணீர் இல்லாததால் பாசனத் திற்கு திறந்து விடப்படவில்லை. அதனால் விவசாயிகள் கிணற்று நீரை பயன்படுத்தி வாழை, கரும்பு, காய்கறி சாகுபடி செய்து வருகின்றனர். சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் இந்த சாகுபடி நடைபெற்று வருகிறது. மழை இல்லாத காரணத்தால் ஆழ் துளை கிணறுகளிலும் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. ஆயிரம் அடி வரை ஆழ்துளை அமைத்தாலும் தண்ணீர் கிடைப்பது இல்லை.

இதனால் இந்த பகுதிகளில் பயிரிடப் பட்டுள்ள பயிர்கள் கருகி வரு கின்றன. தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து போவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**சுட்டெரிக்கும் வெயில் நெல்லை மாவட்டங்களில் அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைகிறது**



நெல்லை,

சுட்டெரிக்கும் வெயில் காரணமாக நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

சுட்டெரிக்கும் வெயில்

நெல்லை மாவட்டத்தில் கோடை வெயில் கொளுத்தி வருகிறது. பகல் நேரத்தில் மக்கள் வெளியே தலைகாட்ட முடியாத அளவுக்கு வெயிலின் தாக்கம் உள்ளது.

சுட்டெரிக்கும் வெயிலால் குளங்கள், கிணறுகளில் உள்ள தண்ணீர் வேகமாக வற்றி வருகிறது. பெரும்பாலான குளங்கள் வறண்டுவிட்டன. நெல்லையில் நாள்தோறும் 100 டிகிரிக்கு அதிகமாக வெயில் வறுத்தெடுக்கிறது.

கடும் வெயில் காரணமாக நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டமும் வேகமாக குறைந்து வருகிறது.

பாபநாசம்–மணிமுத்தாறு அணைகள்

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மக்களின் குடிநீருக்கும், விவசாயத்துக்கும் ஜீவ ஆதாரமாக பாபநாசம் மலையில் உள்ள காரையாறு அணை விளங்குகிறது.

143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர் மட்டம் நேற்று முன்தினம் 36.05 அடியாக இருந்தது. அந்த அணையின் நீர்மட்டம் நேற்று 35.55 அடியாக குறைந்தது.

118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 65.33 அடியாக இருந்தது. நேற்று 64.97 அடியாக குறைந்தது.

மற்ற அணைகள்

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 47.57 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 25 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 28.50 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 24.60 அடியாகவும், குண்டாறு அணையின் நீர்மட்டம் 14.43 அடியாகவும், நம்பியாறு அணையின் நீர்மட்டம் 9.38 அடியாகவும் குறைந்தது.

கத்திரி வெயில் என்று அழைக்கப்படும் அக்னி நட்சத்திரம் இன்னும் தொடங்கவில்லை. கோடை காலத்தின் உச்சமாக கருதப்படும் அந்த நாட்களில், அணைகளின் நீர்மட்டம் இன்னும் குறைய வாய்ப்பு இருக்கிறது.